விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 053 வள்ளுவர் ஆண்டு 2056 தை 28 திங்கட்கிழமை (10.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# திடீர் மின்வெட்டால் நாடு ஸ்தம்பிதம்

- நாடு முழுவதும் நேற்று 5 மணி நேர மின்வெட்டு.
- மின்தடையால் வைத்தியசாலைச் சேவைகள் பாதிப்பு.
- நீர் விநியோகம் பாதிப்பு.
- ரயில் போக்குவரத்துப் பாதிப்பு.
- மின்தடைக்குக் குரங்கே காரணம்.



பாணந்துறை உப மின் கட்டமைப்பில் ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக நாடு முழுவதும் நேற்றுப் பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை திடீர் மின் விநியோகத் தடை ஏற்பட்டது.

பாணந்துறை கிரிட் துணை மின் நிலையத்துடன் குரங்கு மோதியதால் நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்பட்டது என்று மின்சக்தி அமைச்சர் குமார ஜயக் கொடி தெரிவித்தார். 16

## மக்களை வாழவைக்க முடியாத
# அரசே நாட்டில் தற்போதுள்ளது
## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு) நாட்டு மக்களை வாழவைக்க முடியாத அரசாங்கமே தற்போது காணப்படுவதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## 14 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது

(மன்னார்)

14 இந்திய மீனவர்கள் மன்னாருக்கு வடக்கே உள்ளே இலங்கைக் கடற்பரப்பில் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இதன்போது 2 மீன்பிடிப் படகுகளும் கைப்பற்றப்பட்டதாகக் கடற்படை ஊடகப் 15

## அரசு மீது மக்கள் விரக்தியடைந்துள்ளனர்
### திலித் ஜயவீர எம்.பி தெரிவிப்பு

(பொலநறுவை)

திசைகாட்டி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவர வாக்களித்தவர்களில் பெரும்பாலானோர் தற்போது அரசாங் 16

## யாழில் இளைஞனைக் கடத்தி ரூ.80 இலட்சம் கொள்ளை

- பெண் உட்பட நால்வர் கைது
- கடத்தலுக்குப் பயன்படுத்திய கார் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று 80 இலட்சம் ரூபாய் பணத்தை அபகரித்த கும்பலைச் சேர்ந்த நான்கு பேர் யாழ்ப் பாணம் குற்றத்தடுப்பு விசா 15

## யாழ்.பல்கலைக்கழக
# பேரவை உறுப்பினர்களை பதவி விலகுமாறு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இதனடிப்படையில் யாழ். பல்கலைக்கழகப் பேரவை 15

## எமிரேட்ஸுக்கு ஜனாதிபதி இன்று விஜயம்

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதி 15

## கெஹலிய பெற்ற நட்டஈட்டை வைத்து கிளிநொச்சியை அபிவிருத்தி செய்திருக்கலாம்
### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கிளிநொச்சி)

கெஹலிய ரம்புக்வெல பெற்ற நட்ட ஈட்டை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்திருக்க லாம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க பிற்பகல் கிளிநொச்சி புகையிரத நிலையத் 15

## 20 போதை மாத்திரைகளுடன் யாழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

20 போதை மாத்திரைகளு டன் யாழில் சந்தேக நபர் ஒரு வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கொழும் புத்துறையில் நீண்ட காலமாகப் போதை 15

நடுவு நிலை தவறா[illegible]க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43 எம்.பிக்களுக்கு ரூ.122 கோடி இழப்பீடு வழங்கியமை

# ரணில் தனது ஜனாதிபதிப் பதவியை தக்க வைக்க வழங்கிய இலஞ்சமாகும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

அரகலப் போராட்டத்தின் போது வீடுகள் சேதமடைந்த 43 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ரூ.122 கோடி இழப்பீடு வழங்கியமை ரணில் விக்கிரமசிங்க தனது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காகத் தன்னுடன் இருந்தவர்களுக்கு அரச திறைசேரியிலிருந்து பெற்றுக்கொடுத்த இலஞ்சமாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது என சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பேராதனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டதுடன் அவர் மேலும் தெரிவித்ததாவது, நட்டஈடு வழங்கப்பட்ட காலப்பகுதியில் அந்தப் பகுதிக்குரிய பிரதேச செயலாளர்கள், மதிப்பீட்டாளர்கள் பாராளுமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அப்போதைய ஆளுங்கட்சியின் பிரதம கொரடாவாக இருந்த பிரசன்ன ரணதுங்கவினால் கடிதம் அனுப்பப்பட்டு பாராளுமன்றத்துக்கு அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு சென்றிருந்த அதிகாரிகள் அப்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருந்ததுடன் அவர்களுக்கு அந்தக் காலப்பகுதியில் அதிகமாக மதிப்பீடு செய்யுமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் பேரிடர் ஒன்று ஏற்படுமானால் ஒரு நபருக்கு அதிகபட்சமாக 25 இலட்சம் ரூபாவையே வழங்க முடியும். உண்மையில் அந்தத் தொகை கிடைப்பதில் சிரமம் உள்ளது.

ஆனால் அந்தக் காலப்பகுதியில் முறையாக நட்டஈட்டை பெற்றுக்கொள்வதில் முறைமை ஒன்று இருக்கவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க சட்டதிட்டங்களை மாற்றி தேவையான வகையில் நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்கான முறைமையை உருவாக்கியுள்ளார்.

இங்கு சில பிரச்சினைகள் உள்ளன. 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 இலட்சம் முதல் 980 இலட்சம் வரை நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இவர்கள் நட்டஈட்டை மாத்திரம் அல்ல. சில நிறுவனங்களிடமிருந்து காப்புறுதிகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர். நாம் வெளியிட்ட பெயர்ப் பட்டியலிலிருந்து யார் காப்புறுதிகளை பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதை காப்புறுதி நிறுவனங்கள் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அடுத்ததாக அவர்களது அசையும் அசையாத சொத்துக்கள் 800, 900 இலட்சமாக இருந்தால் அவர்களது சொத்துக்கள் தொடர்பிலான அறிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்பிக்க வேண்டும்.

அதிக நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்காக சிலர் தமது வீட்டில் நகைகள், இரத்தினக்கற்கள் இருந்ததாக தெரிவித்துள்ளனர். நட்டஈட்டைப் பெற்றுக்கொண்டவர்களின் பிரதேசங்களில் உள்ள மக்கள் எம்மை அழைத்து அவ்வாறான சேதங்கள் எதுவும் இடம்பெறவில்லை எனக்கூறுகிறார்கள்.

இரண்டு ஜன்னல்கள் மாத்திரமே சேதமடைந்திருந்ததாக கூறுகின்றனர். ஆனால் இவர்கள் எவ்வாறு இந்தளவு நிதியைப் பெற்றுக்கொண்டனர்? அவர்கள் தமது கட்சியின் ஆதரவாளர்களை பெரவாவியில் மூழ்கடிக்கச்செய்து விட்டு தாம் நட்டஈட்டு சமுத்திரத்தில் நன்றாக நீந்தி நீந்தி குளித்துள்ளனர். இதுவே தற்போது புலப்படுகிறது.

எனவே இது தொடர்பில் நாம் விசாரணைகளை முன்னெடுப்போம். இந்த நட்டஈடு மதிப்பீடு செய்யப்பட்ட விதம் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. தமக்கு வழங்கப்பட்ட நட்டஈடு போதாது என ஒருவர் கூறுவதைப் பார்த்தேன். இவர்கள் எவ்வாறு இவ்வளவு சொத்துக்களை கொண்டிருந்தார்கள் என்பது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்கும்.


ரணில் விக்கிரமசிங்க தனக்கு ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுக்கொடுத்தமைக்காகவும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவும் தன்னுடன் இருந்தவர்களுக்காக திறைசேரியிலிருந்து பெற்றுக்கொடுத்த இலஞ்சமாகவே இதனை பார்க்க வேண்டியுள்ளது என்றார். (ம-7)

### நல்லூர் தென் திசை

## நுழைவாயில் நாளை திறப்பு

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தென்திசையில் நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையாக அமைக்கப்பட்ட நுழைவாயில் வளைவு தைப்பூசமாகிய நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-7)

## மூத்த பத்திரிகையாளர் பாரதி காலமானார்



(யாழ்ப்பாணம்)

மூத்த பத்திரிகையாளர் இராஜநாயகம் பாரதி நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 62. கடந்த சில வாரங்களாக உடல் நலம் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் நேற்றுக் காலமானார்.

பத்திரிகைத் துறையில் மிக நீண்டகாலம் பணியாற்றி, பத்திரிகைத் துறைக்கு தனது காத்திரமான வகிபங்கை வழங்கிய பாரதி, நிதர்சனம் பரதனின் சகோதரன் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

### அநுர அரசின் 2025 பட்ஜெட்

# நிபந்தனைகள் பூர்த்தி செய்ய வேண்டும் ஐ.எம்.எப் நிபந்தனை

இந்த ஆண்டுக்கான (2025) வரவு-செலவுத் திட்டத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளதுடன், மார்ச் மாதம் 21ஆம் திகதி வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறானதொரு நிலையிலேயே கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கோசாக் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது,

2024ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி இலங்கையில், சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வு குறித்து பணியாளர் மட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

இதன் பிரகாரம் நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 333 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி இலங்கைக்குக் கிடைக்கும்.

எவ்வாறாயினும், இந்த நிதியுதவிக்கான மேலதிக உறுதிப்பாடுகளுக்கான கலந்துரையாடல்கள் எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரல் பாராட்டத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் நான்காவது - மூன்றாவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 5.5 சதவீதம் வளர்ச்சியடைந்தது.

2024ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் சராசரி பணவீக்கம் இலக்கை விட மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும் 2024ஆம் ஆண்டின் இறுதியில் சர்வதேச இருப்புகள் 6.1 பில்லியனாக அதிகரித்துள்ளது.

எனினும், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைக் கருத்தில் கொள்ளும் போது, கடந்த நவம்பரில் எட்டப்பட்ட பணியாளர் நிலை ஒப்பந்தத்துடன் தொடர்புபடுகிறது.

இதனை அடுத்த வாரங்களில் இடம்பெறவுள்ள கலந்துரையாடல்களின் போது நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு உட்படுத்தப்படும்.

எனவே, விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில், 2025 வரவு -செலவு திட்டத்தை சமர்ப்பிப்பது முக்கியமாகும் என கூறியுள்ளார். (ம-7)


# மரண அறிவித்தல்

## பாலசிங்கம் லூர்த்தம்மா (ஜெயமணி)



மலர்வு : 13.10.1938 உதிர்வு : 09.02.2025

மாதா கோவிலடி துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் லூர்த்தம்மா அவர்கள் நேற்று 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று 10.02.2025 காலை 10.00 மணியளவில் புனித சதா சகாய அன்னை ஆலயத்தில் நடைபெற்று நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஆ.தனபாலசிங்கம் (மைத்துனர்)

(C-2235)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவ சிவ

# தைப்பூசம்

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்

## உலகப் பெருமஞ்சத் திருவிழா







காலம் – 11.02.2025 செவ்வாய்க்கிழமை பால்குடப்பவனி

ஆரம்பம் – காலை 6 மணி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயம்.



## பால்குடப் பவனி

- தைப்பூசத்தினத்தன்று யாழ்.குடா நாட்டின் பல பகுதிகளில் இருந்து பெரும் தொகையான பக்தர்கள் ஒன்று சேர்ந்து பால்குடத்தினை எடுத்தல் வருடாவருடம் இடம்பெற்று வருகிறது.
- அடியவர்களின் வசதி கருதி பால், குடம் என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
- **ஒரு பால்குட பற்றுச்சீட்டு-400/-**
- நாளை திங்கட்கிழமைக்கு முன் ஆலய கரும பீடத்தில் காலை 9.00-11.00, மாலை 4.30-6.00 மணிவரை பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

- **மாபெரும் பொங்கல் (காலை 09.00-2.00 மணிவரை)**
- பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயத்தில் உண்டு.
- பொங்கல் பானை, அகப்பை,பேசின், அரிசி, சர்க்கரை, நெய், தேன், கயு, விறகு, முந்திரிகை வத்தல், வாழை இலை, பால் என்பன உள்ளன.
- வெண் பொங்கல் பொதி-1500
- சர்க்கரைப் பொங்கல் பொதி -2100

**அன்றைய தினம் நண்பகல் பூசை நிறைவுற்றதும் அன்னதான நிகழ்வும் இடம்பெறும்**

**இரவு 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து உலகப் பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதிவலம் வரும் நிகழ்வும் பாரம்பரிய கலை நடன நிகழ்வுகளும் இடம்பெறும்.**

முருகன் அடியார்கள் அனைவரும் அன்றைய தினம் காலை – இரவு வரை நடைபெறும் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு எம்பெருமானிடம் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

**திருவிழா சிறக்க வாழ்த்துவோர்**

# விக்னா பாடசாலை பஸ் சேவை

நவாலி, மூத்தநாயனார் கோயிலடி, மானிப்பாய், உடுவில், மருதனார் மடம், K.K.S வீதி ஊடாக சுண்டிக்குளி பாடசாலை வரையான பாதுகாப்பான பாடசாலை சேவை உங்கள் பிள்ளைகளையும் எங்கள் பஸ்சேவை மூலம் பள்ளிக்கூடம் அனுப்பிட தொடர்பு கொள்ளுங்கள்.

T.P. 077 728 6096

## நவரத்தினம் தச்சுத் தொழிலகம் மரத்தளபாட விற்பனை நிலையம்

navaratnam carpentry workshop

Navaratnam Furniture showroom

கே.கே. எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு (இனுவில்)

T.P: 077 713 0872, 075 850 [illegible]

(C-2233)

## ஸ்ரீராம் ஜிம்



27 ஆண்டுகால இளைஞர், யுவதிகளின் பேராதரவு பெற்ற உடற் பயிற்சி நிலையம்.

T.P 077 220 3077

கே.கே.எஸ் வீதி, இனுவில் மருதனார்மடம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்துக்களின் சமரில் வெற்றியீட்டிய யாழ். இந்து



யாழ். இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்து (பம்பலப்பிட்டி) கல்லூரிக்கும் இடையில், யாழ். இந்து கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முடிவுக்கு வந்த 14 ஆவது இந்துக்களின் சமரில் யாழ். இந்துக் கல்லூரி 64 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கொழும்பு இந்து கல்லூரியின் கடைசி 3 விக்கெட்டுகளை ஹெட் - ட்ரிக் முறையில் வீழ்த்தி 5 விக்கெட்டுக்களை வீழ்த்தி யாழ். இந்து வீரர் சுதர்சன் சுபர்னன் தனது அணி வெற்றி பெறுவதை உறுதி செய்தார்.

இந்த வெற்றியுடன் இந்துக்களின் சமரில் யாழ். இந்துக் கல்லூரி 4 - 3 என்ற ஆட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை அடைந்துள்ளது.


யாழ். இந்துக் கல்லூரியினால் நிர்ணயிக்கப்பட்ட 252 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 187 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

கொழும்பு இந்துக் கல்லூரி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்று சிறப்பான நிலையில் இருந்ததால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அதன் கடைசி 7 விக்கெட்டுகள் 57 ஓட்டங்களுக்குள் சரித்ததால் யாழ். இந்து மகத்தான வெற்றியை ஈட்டியது.

(நி-8-33)

# பிரபல குத்துச்சண்டை வீரர் 28 ஆவது வயதில் உயிரிழப்பு



போட்டியின்போது காயமடைந்த அயர்லாந்தைச் சேர்ந்த பிரபல குத்துச்சண்டை வீரரான ஜான் கூனி சிகிச்சை பலனின்றி தனது 28 ஆவது வயதில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கடந்த 1 ஆம் திகதி நடைபெற்ற பெதர்வெயிட் பட்டத்திற்கான போட்டியின் 9 ஆவது சுற்றில் சக போட்டியாளர் தாக்கியதில் தலையில் பலத்த காயம் அடைந்த ஜான் கூனி உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பரிசோதனை செய்ததில் அவருக்கு தலையில் ரத்தக் கசிவு ஏற்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இந்நிலையில் ஒரு வார காலம் தீவிர சிகிச்சையில் இருந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவரது மரணம் குத்துச் சண்டை உலகில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3287

Search for people, places and things

**கலா**




**மாலன்**




**சாம்சன்**




**கலையரசன்**




**அஞ்சலா**




**றோகன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பாண்டில் 2.5 மில்லியன் தென்னைகள் பயிரிடத் திட்டம்

(கொழும்பு)

**நடப்பாண்டில் 2.5 மில்லியன் தென்னை மரங்களைப் பயிரிடத் தெங்கு பயிர்ச்செய்கை சபை திட்டமிட்டுள்ளது.**

தென்னை பயிர்ச்செய்கையை விரிவுபடுத்துவதற்காக கப்ருக நிதி முகாமை சபை ஒன்றியம் மறுசீரமைக்கப்படும் என்று தெங்கு பயிர்ச்செய்கை சபை தெரிவித்துள்ளது.

இந்தச் செயல்முறையின் முதல் திட்டம் கம்பஹா மாவட்டத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் வைத்தியர் சுனிமல் ஜயக்கொடி தெரிவித்தார்.

அதன்படி, கப்ருகா கடன் திட்டத்திற்கு இணையாக, இந்த கப்ருகா நிதி முகாமை சபை ஒன்றியம் மறுசீரமைக்கப்பட்டு எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும்.

இவற்றில் ஒரு மில்லியன் மரங்கள் வடக்கு தென்னை முக்கோண வலயத்திற்கு அருகில் நடப்படும் என்று சுனிமல் ஜயக்கொடி தெரிவித்தார். (நி-8)

# அரச பணியாளர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படும்

## அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க கூட்டணியினருடனான சந்திப்பில் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பிரதமர் மற்றும் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க கூட்டணியினருக்கு இடையே நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அதிபர், ஆசிரியர் மற்றும் ஆசிரியர் ஆலோசனை சேவைகளிலும் கல்வித் துறையிலும் காணப்படும் பல பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக குறித்த சேவைகளில் காணப்படும் பதவி உயர்வுகள், சம்பள முரண்பாடுகள், தொழில்முறை பிரச்சினைகள், அதிபர், ஆசிரியர் சேவையில் (தேசிய மற்றும் மாகாண) முறையான இடமாற்றங்கள், பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்தல், நிதி வசூலித்தல், தேசிய பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு, புதிய கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் பிரிவேனா அமைப்பில் உள்ள சிக்கல் நிலைகளைத் தீர்ப்பது உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.



அத்துடன் அரசாங்கத்துடன் இணைந்த தனியார் பாடசாலைகளில் கட்டணம் வசூலிப்பது, வகுப்பு அளவுகளை 35 மாணவர்களுக்கு மட்டுப்படுத்துவது, மற்றும் ஆசிரியர் ஆலோசனைச் சேவைக்கான வெட்டுப்புள்ளி பரீட்சைகளை நடத்துவது போன்ற விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இதனையடுத்து பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்கும் போது, வெற்றிடங்கள் இல்லை எனில் மாணவர்களை சேர்க்காமல் இருத்தல், கல்வி அமைச்சு இதற்காக சிபாரிசு கடிதங்களை வழங்காது இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பிரதமர், எதிர்காலத்தில் ஆசிரியர்கள் உட்பட அனைத்து அரசு பணியாளர்களின் சம்பளத்தையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# சுகாதாரப் பணியாளர்களை உள்ளீர்க்க நடவடிக்கை

## வெற்றிடங்கள் விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்கிறார் அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

சுகாதாரத் துறையில் நிலவும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு அடுத்த மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.



பேராதனை போதனா வைத்தியசாலையின் புதிய பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைப் பிரிவைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சுகாதாரத்துறையில் ஏற்பட்டுள்ள பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலைகளை நடத்திச் செல்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

கடந்த காலங்களில், ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமையும் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாகப் பல வைத்தியர்கள் வெளிநாடு சென்றமையுமே இதற்கு வழிவகுத்த பிரதான காரணங்களாகும்.

சுகாதாரச் சேவையைச் சிக்கல் இன்றி முன்னெடுத்துச் செல்வதற்கு சுமார் 2,800 விசேட வைத்தியர்கள் தேவைப்படுக்கின்ற போதிலும் நாட்டில் தற்போது 2,000 விசேட வைத்தியர்களே உள்ளனர்.

அத்துடன் 20,000 வைத்தியர்கள் தேவையாக உள்ள போதிலும் நாட்டில் தற்போது, சுமார் 17,000 வைத்தியர்களே உள்ளனர்.

சுகாதாரத் துறையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அடுத்த மாதத்திற்குள் 3,500 தாதியர்களையும் 976 குடும்பநல சுகாதார சேவை அதிகாரிகள் உள்ளிட்ட அவசியமான பல சுகாதார பணியாளர்களையும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதேநேரம் கடந்த காலங்களில் நாட்டை விட்டு வெளியேறிய விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட சகல வைத்தியர்களும் மீண்டும் நாடு திரும்ப வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதாகவும் அவர்களது சேவை நாட்டுக்கு அவசியமாகிறது எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (நி-8)

# இராசிபலன்

10.02.2025
தை 28, திங்கட்கிழமை
திரயோதசி முன்னிரவு 8.11 மணிவரை
பூநர்பூசம் முன்னிரவு 7.12 மணிவரை

சுபநேரம் -12.34-2.04 மணிவரை
இராகுகாலம் 8.04-9.34 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம் - கேட்டை, மூலம்

வளவன்

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படையும் நாள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, பயணங்களால் பலனுண்டு, உற்சாகமான நாள்.

**துலாம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், தேடிச்சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள்.

**மகரம்** நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், வழிபாடு குதூகலம் தரும், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மனச் சஞ்சலங்கள் சற்றுக் கூடும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள்.

**கும்பம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், ஆரோக்கிமான நாள்.

**மிதுனம்** தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுப செய்திகள் இல்லம் வந்து சேரலாம்

**கன்னி** வழிபாட்டில் ஆர்வம் கூடும், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செல்வநிலை உயரும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**தனுசு** தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்** பெரிய மனிதர்களிக் சந்திப்பு இடம் பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

ஒருவர் முன்னேறுவதைப் பார்த்து மற்ற அனைவரும் சந்தோசப்படும் ஒரே இடம் வரிசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் பிற்பகல் 1.30 மணி அளவில் இடம்பெறும்.

அதிபர் திருமதி கிருஷ்ணலதா குலசங்கர் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொள்ளவுள்ளார். ( நி-8-60)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த காலத்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சீன தூதரகத்தினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

சீனத்தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூ.யன்வெய் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் 350 குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர , மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் , மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ந.கமலதாசன் மற்றும் சீன தூதரக இடைக்கால பொறுப்பாளர் ஜீயானுவேல், சீன தூதரக அரசியல் பிரிவுத் தலைவர் குயின் லிகோங், மற்றும் சீன தூதரக அதிகாரிகள் , மாவட்ட செயலக அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-8)

## அறிவாலயத்தின் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

அறிவாலயம், ஆளுமை விருத்தியகத்தின் வருடாந்த கலைவிழா நாளை மறுதினம் 12 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

அறிவாலய நிர்வாக இயக்குநர் திருமதி சிவநயனி சர்வேஸ்வரா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபரும் ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான ஆறு.சிறிஸ்கந்தமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.குமாரசாமி மற்றும் கிழவன்காடு கலாமன்றஸ்தாபகர் என். சோதிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-8)

## யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் தேவாலயம் திறந்து வைப்பு



(கருமபுரம்)

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்தவ மாணவர்களின் வழிபாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்ட தேவாலயம் யாழ்.மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா, பீடங்களின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பங்குத்தந்தையர்கள், பங்கு மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (நி-8-316)

## உச்சம் தொடும் தேங்காய் விலை

(கொழும்பு)

2024 ஜனவரி மாத இறுதி வாரத்துடன் ஒப்பிடும்போது, ஒரு தேங்காயின் சில்லறை விலை பாரியளவில் அதிகரித்துள்ளதாக ஹெக்டர் கொப் பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த நாட்களில், ஒரு பெரிய தேங்காய் ரூ.200 முதல் 250 வரையிலும், ஒரு சிறிய தேங்காய் ரூ.170 முதல் 190 வரையிலும் விற்கப்படுவதாகவும் குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை , 2024 ஆம் ஆண்டு 3,300 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 2,600 மில்லியன் தேங்காய்களே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இதுவே இலங்கையில் தேங்காய் விலை உயர்விற்கு காரணம் என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் பிரதியமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

## தைப்பூசத்தினத்தில் முருகன் திருப்புகழ் பாடி சரவணபவ, ஓம் நமசிவாய ஓதி எல்லா நலனும் பெறுவோம். 11.02.2025 திக்கரை முருகனை நின் இரு கமலபாதத்தை நின்று பணிவேனோ-திருவடியைத் தொழு

**நாசர்தங் கடையதனில் விரவிநான் மெத்த நொந்து ...... தடுமாறி**
**ஞானமுங் கெடஅடைய வழுவியா ழுத்த ழுந்தி ...... மெலியாதே**

**மாசகந் தொழுமுனது புகழினோர் சொற்ப கர்ந்து ...... சுகமேவி**
**மாமணங் கமழுமிரு கமலபா தத்தை நின்று ...... பணிவேனோ**

**வாசகம் புகலவொரு பரமர்தா மெச்சு கின்ற ...... குருநாதா**
**வாசவன் தருதிருவை யொருதெய்வா னைக்கி ராங்கு ...... மணவாளா**

**கீசகஞ் சுரர்தருவு மகிழுமா வத்தி சந்து ...... புடைசூழுங்**
**கேசவன் பரவுகுரு மலையில்யோ கத்த மர்ந்த ...... பெருமாளே.**

***திருப்புகழ்-211***

கேடு செய்பவருடைய கீழ் மக்களுடைய இடங்களிற் சென்று, அங்கு அவர்களுடன் கலந்து அதனால் மிகவும் நொந்து தடுமாற்றம் அடைந்து அறிவு கெட முழுமையும் தவறான நெறியில் விழுந்து அழுந்தி மெலிவு உறாமல், சிறந்த உலகு தொழுகின்ற **உனது புகழ் ஒரு சொல் அளவும் பகுதியாவது பாடி அதன் நற்பணியில் திக்கரை முருகன் நற்பணியின் பயனாய் சுக நிலையை அடைந்து நல் மணம் வீசும் எம் பெருமாள் திரு வடிகளை மனம் ஒன்று பட்டு நின்று பணிய மாட்டேனோ!**

**தைப்பூசத்தினம் நாம் இறைவன் முருகனைப் பணிந்து திருப்புகழ், கந்தர் அநுபூதி பாடுவோம்.** எல்லா நலனும் பெறுவோம்.

இடும்பன் அசுரர்களுக்கு வில்வித்தை கற்பித்தவன். அவன் அசுரர் குலம் அழிய இடும்பனும் மனைவியும் வனம் சென்று சிவனை நோக்கித் தவம் இருந்தான். சிவன் காட்சி கொடுத்து அருள, அவன் முருகனுக்கு தொண்டு செய்வோம் எனவும் சொல்ல சிவன் அவ்வாறு அருள் செய்து, திருக்குற்றால மலைக்கு அனுப்பினார் எம்பெருமான். அவ்வாறு இடும்பனும் மனைவியும் அங்கு சென்றார்கள்.

போகும் வழியில் **அகத்திய முனிவரைச் சந்தித்தார்கள்** முனிவர் தான் முன்னர் கொண்டு வந்த இரு மலைச் சிகரங்களை கொண்டு வரும்படி பணித்து அவ்வாறு அந்த மலையை சுமப்பதற்கு மந்திரங்களையும் இடும்பனுக்கு சொல்லி அனுப்பினார். இடும்பன் அங்கு சென்ற போது **முருகன் வேறு உருவம் மூலம் காட்சி கொடுத்து வழி காட்டினார்.** அங்கு இடும்பன் அகத்திய முனிவர் அருளிய மந்திரம் ஜெபம் செய்ய அங்கே ஓர்- தண்டும்- ஓர் இருகயிறானதும் முன் கிடைத்து அதன் மூலம் **சப்தகிரி, சிவகிரி இருமலைகளையும் காவடியாகத் தூக்கி வரும்** போது களைப்பின் காரணமாக மலையை இறக்கி வைத்து பின்னர் தூக்க முடியவில்லை.

**அங்கு சிவகிரிமலையில் முருகன் தோன்றி அந்த மலையைத் தனது இடமாக்கி இடும்பனையும் தண்டித்துப் பின்னர் தனது அடிமையாக்கி பழனி மலை போகின்றவர்கள் முதல் இடும்பனை வணங்கிப் பின்னர் தான் பழனித் தண்டாயுத பாணியாகிய முருகனை வணங்கினால்** எல்லா வரமும் தரு வதாக ஓர் வரலாறு.

நாமும் பழனியை வணங்கு வோம். வரம் பல பெறுவோம்- இது தினம்- தைப்பூச நாளாகும்.

ஆதி பராசக்தியிடம் அதி சக்தியாக ஓர் ஆயுதத்தைக் கேட்டார். முருகன் எம் அருள் சக்தியாகிய ஆதிபராசக்தி தனது சக்தியை ஒன்று சேர்த்து ஓர் அருள் மிகு வேல், சக்தி வேலாயுதம் பிரபஞ்சத்தையும் கட்டுவிக்கக் கூடியதாகவும் எம்பெருமான் முருகனுக்குக் கொடுத்த நாளும் தைப்பூச நாளாகும்.

முருகப் பெருமான் வள்ளியைத் திருமணம் செய்த நாளும் தைப்பூச நாளாகும். வேடுவப் பெண்ணாகிய வள்ளியை வழிபட, அதாவது ஆதி பராசக்தியாக நாம் வழிபட்டு ஆன்மா உணர்வு பெற, முருகப் பெருமான் நம்மைத் தேடி வந்து அருள் புரிவான். தேவர்கள் எல்லோரையும் காத்த முருகப் பெருமானுக்கு அற்புத நாம வழிபாடு ஒன்று உண்டு, ஓம் சரவணபவ இதனை காலை, மாலை 108 தடவை, தியானத்தில் இருந்து முருகனை மனதில் இருத்தி தினம், தினம் உச்சரிக்க கேட்கும் வரம் யாவும் கிடைக்கும், “ வேல் மாறன்” மந்திரமாக தினம் ஓதுவோம்.

சிவபெருமான் ஆனந்தத் தாண்டவத்தையும் காட்டிய ருளிய திருநாளே எம் பெருமானுக்குச் சிறந்த நாள் அது தைப் பூசத் தினமாகும்.

தைப்பூச விழா காணாது போவாயோ!

**மைப்பூசும் ஒண் கண் மட**
**நல்லார் மாமயிலைக்**
**கைப்பூசு நீற்றான் கபாலீச்சுரம்**
**அமர்ந்தான்**
**நெய்ப்பூசும் ஒண் புழுக்கல்**
**நேரிழையார் கொண்டாடும்**
**தைப்பூசம் காணாதே**
**போதியோ பூம்பாவாய்.**

***சம்பந்தர்-தேவாரம்***

பொலிவு நிறைந்த தைப்பூசத் திருவிழாவைக் காணாது போகுதியே பூம்பாவையே, என திருஞானசம்பந்தர் பாடிய தேவார மந்திரத்தினாற் சிறந்த நல்ல நாளில் அனைத்து சிவன் ஆலயத்திலும் அடியவர்கள் தமது தீவினைகளைப் போக்கித் திருவருளைப் பெற்று வழிபடுவார்கள்.

சிவபிரானது திரு நடனத்தைக் காண விரும்பித் தில்லை வனத்திலே அளவற்ற காலம் அருந்தவஞ் செய்து, கொண்டிருந்த புலிக்கால முனிவரும், பதஞ்சலியும், அவர்களோடு கூடியிருந்த முனிவர்களும் பிரம்மா, விஷ்ணு, தேவர்களும் தில்லை மூவாயிரவரும் இறை அருள் மிகு அடியார்களும் ஞானக் கண்ணைப் பெற்று கண்டுகளிக்குமாறு சிவபெருமான் தில்லையில் ஆனந்தத் தாண்டவத்தைக் காட்டியருளிய திரு நாள் ஆதலினால் இத் தைப்பூச நாள் சிவனுக்கும் சிறந்த நாளாகும். தைபூசத் தினம் 11.02.2025 முருகனைப் பணிந்து தொழுது திருப்புகழ், கந்தர் அநுபூதி ஓதி திக்கரை முருகன் திருப்பணி தொடரப் பிரார்த்திப்போம்.



**க.கு.க சிவபாலன் போசகர், ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிர்ச்சேதங்களுக்கு இதுவரை

# 184 மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்கி வைப்பு

## கமநல, விவசாயிகள் காப்புறுதிச் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

**கடந்த வருடம் நவம்பர் மாதம் வெள்ளப்பெருக்கு காரணமாக பெரும்போகத்தில் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு 184 மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்கியுள்ளதாக கமநல மற்றும் விவசாயிகள் காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.**

முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோணமலை பகுதிகளில் 3,272 விவசாயிகளுக்கு 70 மில்லியன் ரூபாய் இழப்பீடும் பொலநறுவை மாவட்டதில் 6,239 விவசாயிகளுக்கு 114 மில்லியன் ரூபாய் இழப்பீடும் வழங்கப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ள மாவட்டங்களுக்கான பயிர் இழப்பீடு வழங்கும் பணிகள் இந்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யவுள்ளதாக அந்த சபையின் தலைவர் பேமசிறி ஜாசிங்க ஆராய்ச்சி தெரிவித்துள்ளார். (நி-8)

# எரிவாயு விலையில் திருத்தம் அடுத்த வாரத்திற்குள் முடிவு

(கொழும்பு)

பெப்ரவரி மாதத்திற்கான எரிவாயு விலை திருத்தத்திற்கு நிதி அமைச்சின் ஒப்புதல் இன்னும் கிடைக்கவில்லை என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு விலை திருத்தம் தொடர்பான பரிந்துரைகள் இந்த மாதத்தின் முதல் வாரத்தில் நிதி அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

உலக சந்தை எரிவாயு விலைகளுக்கு ஏற்ப நாட்டின் எரிவாயு விலைகள் மாதந்தோறும் திருத்தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் 4 ஆம் திகதி அறிவிக்கப்படுகின்றன.

இந்த நிலையில் எரிவாயு விலை திருத்தம் தொடர்பான அனைத்து பரிந்துரைகளும் ஏற்கனவே நிதி அமைச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சின் ஒப்புதல் இல்லாமல் அதை அறிவிக்க முடியாது என்றும் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அத்தோடு, அடுத்த வாரத்திற்குள் எரிவாயு விலை திருத்தம் தொடர்புடைய பரிந்துரைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில், கடந்த சில மாதங்களாக, எரிவாயு விலையில் எந்த மாற்றமும் இல்லை என்பதுடன், உலக சந்தையில் எரிவாயு விலைகள் அதிகரித்த போதிலும், மக்கள் சிரமங்களை எதிர்கொள்ளாத வகை யில் எரிவாயு விலையை மாற்றாமல் பராமரிக்க முடிவு செய்ததாக லிட்ரோ நிறுவனம் முந்தைய விலை திருத்தங்களில் சுட்டிக்காட்டியிருந்தது. (நி-8)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: விசாகம்
7 இல் செவ்
கி.பா:33 1/2
உயரம்:5'8"
தகைமை/தொழில்:B.Sc Engineering M.Sc, Chartered Engineering. Civil Engineer(Canada)
எதிர்பார்ப்பு: படித்த. பெண்
தொ.இ: B/15114

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்: மகம்
12 இல் செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L, Sales Officer.
எதிர்பார்ப்பு:அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15115

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்: விசாகம்
7 இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L,குருக்கள்
எதிர்பார்ப்பு: தகுந்த பெண்
தொ.இ: B/15117

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூனர்பூசம்
கி.பா: 60
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.Sc World Vision.
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15121

பிறப்பு: 2003 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L Bank Trainee
எதிர்பார்ப்பு:வெளிநாடு.
தொ.இ: G/15123

பிறப்பு: 2001 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:HND Software Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான வரன்
தொ.இ: G/15125

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



# பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு. தயாபரன் சுதன்
(SLPS-3)
(English Trained, B.COM, L.L.B, BA English (R), EFT, PGDE, MED, Attorney Law (R))

Best Wishes

திருமதி. சிந்தூரா மயூரன்
(NDT, B.Sc, PGDE)

எமது பாடசாலையில் ஆங்கில பாட ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது மு/விநாயகபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற **திரு.தயாபரன் சுதன்** அவர்களையும் அண்மையில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்ற எமது பாடசாலையின் விஞ்ஞானபாட ஆசிரியை **திருமதி.சிந்தூரா மயூரன்** அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

(5357)

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.



# கடைதிறப்பு விழா அழைப்பு

ஸ்ரீ சரவண பவன் உயர்தர சைவ உணவகம்

- காலை உணவுகள்
- சிற்றுண்டி வகைகள்
- மதிய உணவுகள்
- இரவு உணவுகள்

ஓடர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்

10.02.2025 இன்று மு.ப 9.35-10.30 வரையுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைத்து வாடிக்கையாளர்களையும் வருகை தருமாறு வருக வருக என வரவேற்கிறோம்.

(3368)





அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு முன்பாக




தொ.இல-077 563 3459


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலியில் பரவும் காட்டுத்தீ அவசர நிலை பிரகடனம்



(சிலி)

தென் அமெரிக்க நாடான சிலியின் நுபல், மவுலி ஆகிய மாகாணங்களில் கடந்த சில நாட்களாகக் காட்டுத்தீ வேகமாகப் பரவி வருகிறதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்புப் படையினர் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இரு மாகாணங்களிலும் 15 இடங்களில் காட்டுத்தீ பரவி வருகிறது.

இந்நிலையில் காட்டுத்தீ காரணமாக நுபல், மவுலி ஆகிய 2 மாகாணங்களிலும் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை காட்டுத்தீயைப் பற்ற வைத்ததாக இதுவரை 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-8)

# இறுதிக் கட்டத்தை எட்டிய போர் நிறுத்த ஒப்பந்தம்



(ஜெருசலேம்)

போர் நிறுத்த இறுதிக் கட்டத்தில் பிணைக் கைதிகள் 3 பேரை ஹமாஸ் விடுவித்தது. இதற்கு பதிலாக 100 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் விடுவித்தது.

மேற்காசிய நாடான இஸ்ரேல் மற்றும் காசா உள்ளிட்ட பாலஸ்தீன பகுதிகளை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாதிகள் இடையே, 2023, ஒக்டோபர் 7 இல் போர் தொடங்கியது.

அமெரிக்கா, கட்டார், எகிப்து ஆகியவற்றின் மத்தியஸ்த முயற்சியால், போரை நிறுத்துவதற்கான ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானது.

ஹமாஸ் பயங்கரவாதிகள் பிடித்துச்சென்ற பிணைக் கைதிகளை விடுவிக்கவும், அதற்காக இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனர்களை விடுவிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதுவரை 7 இற்கும் மேற்பட்ட பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டு உள்ளனர்.

இந்நிலையில், மேலும் மூன்று பிணைக் கைதிகளை, காசாவில் உள்ள செஞ்சிலுவை சங்கத்தினரிடம் ஹமாஸ் படையினர் ஒப்படைத்தனர். இதற்கு, பதிலாக 100 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் விடுவித்தது.

அவர்களின் கொடூரமான தோற்றம் இஸ்ரேலியர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மேலும் இஸ்ரேல் காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் போர் நிறுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் ஏராளமான பாலஸ்தீனியர்களை விடுவிக்கத் தொடங்கியது.

இஸ்ரேலுக்கு வந்த பிணைக்கைதிகளை குடும்பத்தினர் கண்ணீர் மல்க ஆரத்தழுவி வரவேற்றனர். (நி-8)

# சொந்த மக்களை... குவித்த இ...

## அம்பலமான உண்...

(ஜெருசலேம்)

**இஸ்ரேல் எல்லையில் ஹமாஸ் படைகள் நடத்திய தா... மோசமாக சொந்த மக்களையே பழிவாங்கும் Hanni... நடவடிக்கையை முன்னெடுத்ததாக முன்னாள் இஸ்ரேலிய... யோவ் கேலன்ட் ஒப்புக்கொண்டுள்ளார்.**

இஸ்ரேலின் செய்தி ஊடகம் ஒன்றிற்கு அவர் அளித்த நேர்காணலின் போது கேலன்ட் உண்மையை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, Hannibal Directive என்பது சர்ச்சைக்குரிய கொடூர நடவடிக்கையாகும்.

இந்த இராணுவ நடவடிக்கை என்பது, எதிரிகளின் கைகளில் சிக்காமல் இருக்க சொந்த மக்களையே பழி வாங்குவதாகும்

இந்த நடவடிக்கை சர்ச்சைக்குரியது என்பதுடன், உரிய அனுமதி பெறாமல் பல்வேறு மோதல்களில் உத்தியோகப்பூர்வமற்ற முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2023 ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் எல்லையில் ஹமாஸ் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 1100 இஸ்ரேலிய பொதுமக்கள் மற்றும் இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் மீது அப்போது இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது.

ஆனால் தற்போது முன்னாள் அமைச்சர் கேலன்ட் வெளிப்படுத்தியுள்ள தகவலின் அடிப்படையில், காசா போருக்கு காரணம் தேடும் வகையில் சொந்த மக்களையே இஸ்ரேல் கொன்றுள்ளது அம்பலமாகியுள்ளது.

மேலும், ஒக்டோபர் 7 ஆம் திகதி தாக்குதலின் போது, இஸ்ரேலிய இராணுவம் ஹமாஸ் படைகளை குறிவைத்து ஆளில்லா விமான தாக்குல் நடாத்தியது.

மேலும் ஹமாஸ் படைகளிடம் சிக்கிய இஸ்ரேலிய மக்கள் மீதும் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஏற்கனவே ஐ.நா வெளியிட்டுள்ள அறிக்கையிலும் நோவா இசை விழாவில் கலந்துகொண்ட மக்கள் மீது இஸ்ரேல் இராணுவம் ஹெலிகொப்டர் தாக்குதல் நடத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, இஸ்ரேல்

# கனடா மீது ட்ரம்பின் ஆசை உண்மையானது – ட்ரூடோ

(ஒட்டாவா)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உண்மையாகவே கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க விரும்புகின்றார்.

அவரின் இந்த ஆசை உண்மையானது என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வர்த்தக சமூகத்தினர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

எங்கள் நாட்டை கைப்பற்றி அமெரிக்காவுடன் இணைப்பது இலகுவான விடயம் என ட்ரம்ப் எண்ணுகின்றார்.

ட்ரம்ப் கனடாவின் கனிம வளங்கள் மீது கண் வைத்துள்ளார். அவர்களிற்கு எங்கள் வளங்களை பற்றி தெரியும் எங்களிடம் என்ன உள்ளது என்பது தெரியும் இதன் காரணமாகவே அவர்கள் எங்களை தங்களுடன் இணைத்து 51 ஆவது மாநிலமாக மாற்றுவது



குறித்து பேசுகின்றனர் என தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ளைக் கொன்று

# இஸ்ரேல்!

## ...ன்மைகள்

...ய தாக்குதலின் போது மிக
...annibal Directive என்ற
...ரலிய பாதுகாப்பு அமைச்சர்



எல்லையில் ஹமாஸ் படைகள் துப்பாக்கிச் சூடு நடத்திய சில நாட்களுக்குப் பிறகு, ஒக்டோபர் 11 ஆம் திகதி லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா படைகள் மீது ஒரு பெரிய தாக்குதலுக்கு தான் அழுத்தம் கொடுத்ததர்கவும் கேலண்ட் வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும், இஸ்ரேலியப் படைகளுக்கு ஹிஸ்புல்லா கூட்டம் குறித்து உளவுத்துறை தகவல்கள் கிடைத்ததாகவும், அங்கு அவர்கள் ஹசன் நஸ்ரல்லா மற்றும் ஈரானிய அதிகாரிகள் உள்ளிட்ட உயர் தலைவர்களை குறிவைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸ் படைகளுடனான போர் நிறுத்த நடவடிக்கைகளை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அவரது அமைச்சரவையே காலதாமதம் செய்து வந்ததாக கேலண்ட் அம்பலப்படுத்தியுள்ளார்.

பணயக்கைதிகளை மீட்கும் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க நெதன்யாகு அரசாங்கம் தயங்கியதாகவும், பெரும்பாலான பணயக்கைதிகளை இஸ்ரேல் இராணுவமே கொன்றுள்ளதாகவும் கேலண்ட் வெளிப்படுத்தியுள்ளார்.

16 மாதங்களாக இஸ்ரேல் முன்னெடுத்த போரில் இதுவரை கொல்லப்பட்ட பாலஸ்தீன மக்களின் எண்ணிக்கை 48,000 என்றே கூறப்படுகிறது. ஆனால் 2 லட்சம் கடந்திருக்கலாம் என்றே சில மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. (நி-8)

# சீனாவில் நிலச்சரிவு 30 பேர் மாயம்



(பீஜிங்)

சீனாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 30 பேர் காணாமற்போயுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக அதிகாரிகள் தெரிவிக்கையில், தென்கிழக்கு மாகாணமான சிசுவானில் உள்ள மலை கிராமம் ஒன்றில் நேற்று முன்தினம் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 10 வீடுகள் புதையுண்டன.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் இருந்து 2 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். இது தவிர, அந்தப் பகுதியில் வசிக்கும் சுமார் 200 பேர் பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலச்சரிவில் சிக்கிய சுமார் 30 பேரைக் காணவில்லை. அவர்களை மீட்கும் பணியில் அனர்த்த கால துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவித்தனர்.

இந்த நிலச்சரிவுக்கான காரணம், இதனால் ஏற்பட்டுள்ள நிலவியல் பாதிப்புகள் குறித்தும் ஆய்வு செய்யுமாறு அதிகாரிகளுக்கு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# பேருந்து-லொறி மோதி விபத்து 41 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு

## மெக்சிக்கோவில் துயரம்

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவின் தெற்கு மாகாணத்தில் உள்ள கான்குனில் இருந்து டபாஸ்கோவிற்கு 48 பேரை ஏற்றிக் கொண்டு சென்ற பேருந்தொன்று எதிரேவந்த லொறி மீது மோதி தீப்பற்றி எரிந்ததில் 41 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் தீவிரமாக மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ் விபத்தில் 41 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில், மேலும் சிலர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-8)



# கனடாவை உளவு பார்க்கும் சீனா

## கனடாவின் குற்றச்சாட்டால் பரபரப்பு

(ஒட்டாவா)



ஆளுங்கட்சி தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை சீனாவிலிருந்து சில அந்நிய சக்திகள் உளவு பார்ப்பதாக கனடா குற்றம் சாட்டியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் நிதி அமைச்சர் பதவியை கிறிஸ்டியா பிரீலாண்ட் கடந்த டிசம்பரில் இராஜினாமா செய்தார். அதைத் தொடர்ந்து பிரதமர் பதவியையும், கட்சித் தலைவர் பதவியையும் ஜஸ்டின் ட்ரூடோ இராஜினாமா செய்தார். புதிய கட்சித் தலைவர் நியமிக்கப்படும் வரையிலும் அவர் பிரதமராக பதவி வகிப்பார் என அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஆளும் லிபரல் கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுக்கும் பணிகள் நடக்கின்றன. இதன் முக்கிய வேட்பாளராக கிறிஸ்டியா பிரீலாண்ட் உள்ளார்.

இந்நிலையில், அவரது பிரசார குழு உறுப்பினர்களையும், கட்சியின் முக்கிய நிர்வாகிகளையும் குறிவைத்து சில அந்நிய சக்திகள் தீங்கிழைக்கும் செயலில் ஈடுபட்டிருப்பதாக கனடா அரசின் உலகளாவிய விவகாரங்களுக்கான உடனடி நடவடிக்கை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இதில், சீனாவைச் சேர்ந்த சீனா டிஜிற்றல் டைம்ஸ் என்கிற இணையத்தள செய்தி நிறுவனத்தின் நிபுணர்களும், சீன அரசின் சமூக வலைத்தளமான வீசேட் கணக்குகளும் சம்பந்தப்பட்டிருப்பதாக கனடா தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 ஆம் நாள்

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 26 . 03 . 1952



விண்ணில் 11 . 01 . 2025

அமரர்.

## சச்சிதானந்தம் செல்வராணி

எம் ராஜ்ஜியத்தின் ராணி எங்கள் செல்வராணி
உம் அன்பு அரசாட்சியத்தின் இழப்பதிலே
அல்லலுற்று அனு தினமும் ஆற்றாது சிந்தும்
எம் கண்ணீரிலும் கரையவில்லை இச் சோகம்
உமை நாளும் எண்ணி எண்ணியே
நம் நரக நாட்களை நகர்த்தியும் இன்னும்
எம் துயரம் மீளவில்லை அம்மா..! மீட்ட நீருமில்லை..!
நீர் இல்லா இவ் உலகில்
உம் நினைவின் சுவாசத்துடன் பயணிக்கிறோம்
சிவனடி நாடிய உம் ஆத்மா
அவனடியில் அமைதி கொள்ள வேண்டுகிறோம்..!

எங்கள் அன்புத் தெய்வத்தின், 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.02.2025) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

எங்கள் இதய தெய்வம் சச்சிதானந்தம் செல்வராணி அவர்கள் கடந்த 11.01.2025 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த செய்தியறிந்து, ஓடோடி வந்து ஆறுதல் தந்த, உடனிருந்து உதவிகள் புரிந்த, தொலை தூரத்திலிருந்து ஆறுதல் சொன்ன, பதாதைகள், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட, ஈமக் கிரியைகளில் கலந்து கொண்ட அத்தனை நல் உள்ளங்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

இருபாலைவீதி,
கோண்டாவில்.

தகவல்:-குடும்பத்தினர் (827)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 900 | 800 | 900 | 800-950 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 170 | 170 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1400 | 1100-1300 |
| தக்காளி | 200 | 200 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 200 | 200-250 |
| கோவா | 350 | 300 | 250 | 260 |
| கரட் | 450 | 650 | 600 | 580 |
| பூசணி | 120 | 120 | 150 | 80-90 |
| புடோல் | 200 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 250 | 150 | 160 | 150-180 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 500 | 150-380 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 180 | 155 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 300 | 400 | 500 | 300-350 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 150 | 150 |
| பயற்றங்காய் | 800 | 600 | 800 | 750-900 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 300 |
| பீற்றூட் | 300 | 300 | 400 | 250 |
| கறிமிளகாய் | 1000 | 900 | 900 | 800-900 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1500 | 1500 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 350-400 |
| கத்தரிதம்புள்ள | 750 | 650 | 500 | 500 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 80 | 50-70 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 200-300 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 250 | 200-250 | 150-230 |
| இராசவள்ளி | 600 | 300 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 180 | 150 | 230 | 120-150 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 130 | 100 |
| வல்லாரை | 60 | 60 | 50 | 50 |
| ஈரப்பலா | 150 | 120 | 100 | 100 |

## இன்று ஒரு தகவல் 318



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# சீதையின் சிரிப்பு!

அசோக வனத்திலே ஒரு மரத்தின் மேல் அனுமன் அமர்ந்திருந்தார். சீதையைப் பார்ப்பதற்காக ராவணன் வருகிறார். என்னென்னமோ சொல்லிப் பார்க்கிறான்.

நதியின் பிரவாகம் இருக்கிறதே. அது போனால் போனதுதான். இளமையும் அப்படித்தான். போனால் திரும்பி வராது. உன்னுடைய யௌவனத்தை ஏன் இப்படி வீணாக்கிக் கொண்டிருக்கிறாய். என்னைத் திருமணம் செய்துகொண்டு சந்தோசமாக இருக்க வேண்டியது தானே என்றான்.

இந்தத் தகாத வார்த்தைகளைக் கேட்டதும் யாருக்கும் கோபம் வருவது இயல்பு. ஆனால் சீதை ஒரு துரும்பை அவன் முன்னால் போட்டு புன்சிரிப்புடன் அவனுக்குப் பதில் சொல்வதாக வால்மீகி எழுதியிருக்கிறார்.

இந்த இடத்திலே எங்களுக்கு ஒரு சந்தேகம். இந்த நேரத்தில் சிதையின் முகத்தில் புன்சிரிப்பு வருவதற்கு என்ன காரணம்?

இந்தச் சந்தேகத்தைப் பக்தி பிரசங்கம் செய்கின்ற ஒருவர் தீர்த்து வைக்கிறார். எப்படித் தெரியுமா?

சீதா கல்யாணம் நடந்த சமயத்தில் பரமசிவனுக்கு அழைப்பு அனுப்பவில்லையாம். ஏன் தெரியுமா? விலாசம் கிடைக்கவில்லை. அவர் தான் எங்கேயும் இருப்பவராச்சே. எந்த விலாசத்திற்கு பத்திரிகையை அனுப்ப முடியும். அதனால் என்ன செய்வதென்று தெரியாமல் இருந்துவிட்டார்களாம்.

ஆனால் பரமசிவன் சும்மா இல்லை. பத்திரிகை வைக்கவில்லை என்றாலும் சீதைக்குத் திருமணம் என்று கேள்விப்பட்டு வந்து சேர்ந்துவிட்டார்.

ஆனால் பாருங்கள்... அவர் வந்து சேருவதற்குள் திருமணம் முடிந்து போய் விட்டது. மணமக்கள் எல்லோருடைய காலிலும் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார்கள். அந்த நேரம் பார்த்து பரமசிவன் வந்து சேர்ந்தார். உடனே இராமரும் சீதையும் அவர் காலில் விழுந்து வணங்கினார்கள்.

சீதை பரமசிவனைப் பார்த்து நீங்கள் எங்களுக்கு ஒரு பரிசும் கொடுக்க வேண்டாம். தங்களுடைய ஆசி மட்டும் எங்களுக்கு இருந்தால் போதும் என்றாராம்.

ஏன் பரிசு வேண்டாம் என்று சொல்லுகிறாய்? என் கையில் எதுவும் இல்லை என்பதைப் பார்த்துவிட்டு அப்படிச் சொல்கிறாயா? என்று கேட்டார் பரமசிவன்.

அப்படித்தான் என்று வைத்துக்கொள்ளுங்களேன். உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாமே என்பதற்காக அப்படிச் சொன்னேன் என்றார் சீதை. அப்படியெல்லாம் நினைத்து விடாதே. என்னிடம் மிக உயர்ந்த பொருள் ஒன்று இருக்கிறது. அதை உனக்குப் பரிசாகக் கொடுக்கப் போகின்றேன் என்றார் அவர்.

அது என்ன? என்று கேட்டார். என்னுடைய புன்சிரிப்பு என்றார். அது எப்படி விலை உயர்ந்த பொருளாகும் என்று கேட்டார் சீதை. ஏன் ஆகாது? என் சிரிப்பைக் கண்டுதான் திரிபுரம் எரிந்தது தெரியுமா? அதை உனக்குப் பரிசாகக் கொடுக்கிறேன் என்றார்.

இப்படி அப்போது வாங்கிய அந்தப் பரிசு தான் இன்றைக்கு அசோக வனத்திலே சீதையிடம் இருந்தது.

இராவணனுக்கு முன்னால் ஒரு துரும்பைப் போட்டுவிட்டுச் சீதை புன்முறுவலோடு பதில் சொன்னதாக எழுதியிருப்பதற்கு இதுதான் காரணம். அந்தச் சிரிப்பு திரிபுரத்தை எரித்தது. இந்தச் சிரிப்பு இலங்கையை எரிக்கப் போகிறது என்பதைக் காட்டுவதற்குத் தான் சீதை முகத்திலே சிரிப்புத் தெரிந்தது என்று விளக்கம் கொடுக்கிறார் அந்தப் பெரியவர்.

ஆகக் கூடிய சிரிப்பிலே எவ்வளவு அர்த்தம் இருக்கிறது பாருங்கள். ஒருநாள் ஒருவர் ரொம்ப சாவகாசமாக முகத்திலே புன்முறுவலோடு வந்து கொண்டிருந்தார். என்ன சேர் விடயம். உங்கள் முகத்திலே தெரியும் அந்தப் புன்முறுவலுக்கு என்ன காரணம் என்று அவரிடம் கேட்டேன்.

வைக்கோல் போர் தீப்பிடித்து எரிகிறது சேர். அதுதான் இப்படி வந்து கொண்டிருக்கிறேன் என்றார். என்ன சேர் இது. அதை இவ்வளவு சாதாரணமாக எடுத்துக்கொள்கிறீர்கள் உடம்பு பதற வேண்டாமா என்றேன். எதற்குப் பதறவேண்டும்? எரிகின்ற வைக்கோல் போர் என்னுடையது இல்லை. எதிர் வீட்டுக்காரனுடையது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/ மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் திருமதி சுதாமதி தயாபரன் தலைமையில் இடம்பெற்றது.

(படம்: சுபேசன்)

## கசிப்புடன் கைது

(சாவகச்சேரி)

ஒரு லீற்றர் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பேருந்தில் இருந்தே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

33 வயதான சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கசிப்புடன் கைதாகியுள்ளார்.

கைதான நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-8-30)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சுரைக்காய்

**Botanical name- Lagenaria siceraria**
**Family- Cucurbitaceae**
**Eng-bottle gourd**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இது வெள்ளரிக் குடும்பத்தைச் சேர்ந்தது. இதில் கசப்பு, இனிப்பு என இரு வகை உண்டு. நிறைய மருத்துவக் குணங்கள் நிறைந்தது.

இனிப்பு வகையைத்தான் பயன்படுத்த வேண்டும். கசப்பு இனம் நச்சுத்தன்மையானது. எமது முன்னோர்கள் சுரைக்காயை குடுவையாக தயாரித்து அதில் நீர்நிரப்பி குளிர்ச்சிக்காக அருந்தி வந்தார்கள்.

சித்த மருத்துவத்தில் மருந்துகளை இக் குடுவைக்குள் சேமித்து வைப்பார்கள். இதனால் மருந்தின் வினைத்திறன் அதிகமாக இருக்கும்.

இது ஓர் நீர்க்காய். இயற்கையாகவே இச் சுரக்காயில் Cucurbitacin எனும் வேதியற்சத்து உண்டு.

இது இயற்கையாகவே சுரைக்காய் கொடியை பூச்சித் தாக்கங்களில் இருந்து பாதுகாக்கக்கூடியது.

Cucuribitacin எனும் சத்து கசப்பு இனத்தில் தான் காணப்படும். கசப்பு சுரக்காயை யூஸ் தயாரித்து எடுத்தால் வயிற்று வலி, வயிற்றுபோக்கு, வாந்தி, குருதிச்சோகை போன்ற நிலைமைகளை ஏற்படுத்த பார்க்கும். எனவே கசப்பு இனத்தை பயன்படுத்த வேண்டாம்.

குளிர்காலம் முடிந்து வெயிலின் தாக்கம் அதிகரிக்கின்ற இக் காலப் பகுதியில் சுரைக்காயை நீங்கள் அவசியம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதில் நீர்ச்சத்தும் அதிகம் உண்டு. அதே போல் சிறுநீரையும் அதிகளவில் வெளியேற்ற உதவும். சுற்றுப்புறச் சூழலிலுள்ள வெயிலில் இருந்து எம்மைப் பாதுகாக்க சுரைக்காய் யூஸ் அருந்த வேண்டும்.

இக் கொடி வெப்ப மண்டல மூலிகையாகும். எமது நாட்டில் அதிகளவில் பயி



ரிப்படுகிறது. ஆனால் இதன் தாயகம் தென் ஆபிரிக்கா ஆகும். பயிரிடத் தொடங்கி 60 நாட்களில் கொடியில் காய்கள் கிடைக்கத் தொடங்கும்.

நீர்ச்சத்து மிகுந்த காய் என்பதால் இதன் கலோரி அளவுகள் மிகக் குறைவு. ஒரு கப் அளவு நீங்கள் சாப்பிட்டால் கூட வெறும் 17 கலோரிகள் தான் கிடைக்கும். ஒரு கப்பிற்கு புரதம் 1 கிராம், கொழுப்பு 1 கிராம், மாச்சத்து 3 கிராம், நார்ச்சத்து 1 கிராம் தான். ஏன் இவ்வளவு குறைவாக சத்து இருக்கு என்று நோக்கினால் இது நீர்க்காய் என்பதால் ஆகும்.

ஆனாலும் அந்த நீர்ச்சத்திலுள்ள விற்றமின்கள், தாதுச்சத்துக்கள் தான் மிகுந்த ஆரோக்கியமான நன்மைகளைக் கொடுக்கும். இரும்புச்சத்து, கல்சியம், நாகச்சத்து, உயிர்ச்சத்து A என்பன அதிகளவில் காணப்படும்.

எமது கண்பார்வைக்கு சிறந்த காய் எமது உடலின் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க உதவுகிறது. இந்த யூஸில் தினமும் 150 மில்லி அருந்தலாம். மிளகுதூள், சீனி, உப்பு சேர்த்தும் தயாரிக்கலாம்.

ஆரம்பத்தில் 50 மில்லி அளவு யூஸ் அருந்தலாம். போகப்போக 150 மில்லி வரை எடுக்கலாம். உணவாக அதாவது மரக்கறியாக வாரம் இரண்டு நாட்கள் சமைத்துச் சாப்பிடலாம் இதைவிட Lutine, zeoznthine போன்ற Antioxidants சத்துக்கள் அதிகமாகக் காணப்படும். எனவே அடிக்கடி சாப்பிட்டு வருவதால் புற்று நோய் ஏற்படுவதை தடுக்கக்கூடிய உணவுக் கூறாகவும் அமையும்.

மலம் கழிக்கும் போது நிறைய நேரம் செலவழித்து முக்கி இருக்கக் கூடாது. எனவே இவ் நீர்ச்சத்தும், நார்ச்சத்துமுள்ள சுரைக்காயை சமைத்து சாப்பிடும் போது மலம் இலகுவாக கழியும். சுரைக்காயில் இருக்கும் இவ் நார்ச்சத்தானது நீர்ச்சத்துடன் கூடி குடலில் இருக்கும் நல்ல பக்ரீரியாக்களின் உற்பத்தியைக் கூட்டி குடலில் ஏற்படும் ஒவ்வாமையையும் நீக்கி குடலின் ஆரோக்கியத்தை பேணக் கூடியது.

நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்தது. மாச்சத்தும் மிகக்குறைவு. நீர்ச்சத்தும் நிறைந்த காயாக இருப்பதால் சீனி சேர்க்காமல் மிளகுதூள் உப்பு சிறிது சேர்த்து யூஸாக அருந்தும் போது வயிறு நிறைந்த உணர்வு ஏற்படும்.

எனவே நீரிழிவு நோயாளிகள் அதிகமாக உணவு எடுப்பதையும் தடுத்து கொள்ளும், உடல் எடையை குறைக்க நினைப்பவர்களும் சுரைக்காயை உணவில் அதிகம் எடுத்துக் கொள்ளலாம்.

அடுத்ததாக இருதய நோயாளிகளுக்கு சிறந்தது. கெட்ட கொலஸ்ரோலை குறைக்கக்கூடியது. இதுவும் நார்ச்சத்தும், நீர்ச்சத்தும் நிறைந்ததாக இருப்பதும் அத்துடன் பொட்டாசியம் சத்தும் இக்காயில் காணப்படுவதால் அதி உயர் குருதி அமுக்கத்தையும் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

வயதானவர்களில் Macular Degeneration ஏற்படுதவதால் கண்பார்வைக் குறைவு ஏற்படும். இச் சுரைக்காய் சாப்பிடும் போது விழித்திரையில் சிதைவு ஏற்பட்டு கண் பார்வைக் குறைவு ஏற்படுவதையும் தடுக்கக் கூடியது.

கண்களின் லென்ஸில் படியக்கூடிய புரை ஏற்படுவதையும் வெள்ளைப் படிவங்கள் ஏற்படுவதையும் இச் சுரைக்காயில் இருக்கும் லியூற்றின், ஸாந்தீன் போன்ற இரசாயனச் சத்துக்களே இதற்கு காரணமாகும். அத்துடன் ஆண்களுக்கு Prostate சுரப்பி வீங்குதலையும் தடுக்கக் கூடியது. தைரோயிட்டு ஹோமோன் சுரப்பை சீராக பேணுவதையும் ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளது. ஆகவே இவ் மருத்துவக் குணங்கள் நிறைந்த சுரைக்காயை உணவாகவோ, யூஸாகவோ தயாரித்து பயன்படுத்த வேண்டும். அதிகம் கசப்பான இச் சுரைக்காயை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். இச் சுரைக்காயில் காணப்படும் Choline எனும் சத்தானது மனஅழுத்தத்தை குறைத்து எமது மூளை ஆரோக்கியத்திற்கு (Mental Health) உதவுகிறது. சர்க்கரையை உயர்த்தும் திறன் குறைவாக உள்ள காயாக இருப்பதனால் (Low Glycemic index) நீரிழிவு நோயாளிகள் தாராளமாக பயன்படுத்தலாம். சித்த மருத்துவத்தில் சுரைக்காயின் சுவை இனிப்பாகவும் வீரியம் குளிர்ச்சியாகவும் தெளிவாகவும் (Pst digestive stage) இருக்கும் என கூறப்பட்டுள்ளது. இனிப்பு இனத்தை மட்டுமே பயன்படுத்தவும். இவ் இனத்தில் மிகச் சொற்ப கசப்பு உணர்வும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 698





"பின்னே, நாம் எங்கே போகிறோம்?" "என்னடி அதுகூட மறந்து போய் விட்டதா? ஆனை மங்கலத்துக்குப் போகிறோம் என்று தெரியாதா?" "என்ன ஊர்? இன்னொருதடவை சொல்லுங்கள்!"

"சரியாய்ப் போச்சு! ஆனை மங்கலத்துக்குப் போகிறோம்! ஆனையின் முதுகில் ஏறிக்கொண்டு போகிறோம்!" "ஐயோ! யானையா?"

"அடி பைத்தியமே! உன் உடம்பு ஏனடி நடுங்குகிறது! யானை என்ற பெயரைக் கேட்டாலே பயப்படத் தொடங்கிவிட்டாயா?" "அக்கா! சற்று முன் தூங்கிப் போய்விட்டேனா?"

"ஆமாம், ஆமாம்! யானையின் மேல் அம்பாரியில் பிரயாணம் செய்கிற சொகுசில் ஆனந்தமாய்த் தூங்கி விட்டாய்!" "ஆனந்தம் ஒன்றுமில்லை, அக்கா! பயங்கரமான கனவுகள் கண்டேன்!"

"அப்படித்தான் தோன்றியது! ஏதேதோ பிதற்றினாய்!" "என்ன அக்கா பிதற்றினேன்!" "காலாமுகர் என்றாய்! பலி என்றாய்! கஜேந்திர மோட்சம் என்றாய்! யானைத் துதிக்கை என்றாய்! அப்புறம் முதன் மந்திரி அநிருத்தரைப் "பாவி, பழிகாரன்" என்று திட்டினாய். அந்தப் பிரம்மராயருக்கு நன்றாய் வேண்டும்! நீ தூக்கத்தில் அவரைப் பற்றித் திட்டியதையெல்லாம் அவர் கேட்டிருந்தால், பல நாள் தூங்கவே மாட்டார்!"

"அதெல்லாம் நடந்தது நிஜமாகக் கனவுதானா, அக்கா!" "நிஜமாகக் கனவா? பொய்யாகக் கனவா? எனக்கு என்ன தெரியும்? நீ என்ன சொப்பனம் கண்டாய் என்பதே எனக்குத் தெரியாது."

"காலாமுகர்கள் என்னைப் பிடித்துக்கொண்டு போனார்கள். முதன் மந்திரி என்னிடம் இளவரசரைப்பற்றி இரகசியத்தைக் கேட்டார். நான் சொல்ல மறுத்துவிட்டேன். உடனே யானையை அழைத்து என்னைத் தூக்கி எறிந்து கொல்லும்படி கட்டளையிட்டார். அப்போது நான் கொஞ்சங் கூடக் கலங்காமல் தைரியமாக இருந்தேன். அக்கா! அப்போது உங்கள் ஞாபகமும் வந்தது. நீங்கள் அங்கே இல்லையே, என்னுடைய தைரியத்தைப் பார்ப்பதற்கு என்று."

"போகட்டும் சொப்பனத்திலாவது அவ்வளவு தைரியமாக நடந்து கொண்டாயே? அதன் பொருட்டுச் சந்தோஷம்!" வானதி சற்றுச் சும்மா இருந்துவிட்டு, "என்னால் நம்பமுடியவில்லை!" என்றாள். "உன்னால் என்னத்தை நம்ப முடியவில்லையடி?" "நான் கண்டதெல்லாம் கனவு என்று நம்பமுடியவில்லை."

"சில சமயம் சொப்பனங்கள் அப்படித்தான் இருக்கும் நிஜமாக நடந்தது போலவே தோன்றும். நான்கூட அப்படிப்பட்ட சொப்பனங்கள் பலமுறை கண்டிருக்கிறேன்." "அப்படி என்ன சொப்பனம் கண்டிருக்கிறீர்கள்? சொல்லுங்களேன்?"

"ஏன்? என் தம்பி கூடத் தான் அடிக்கடி என் கனவில் வருகிறான். இலங்கைக்கு அவன் போய் எத்தனை மாதம் ஆயிற்று? ஆனால் இரவில் கண்ணை மூடினால் அவன் தத்ரூபமாக என் முன்னால் வந்து நிற்கிறான்" "நீங்கள் அதிர்ஷ்டசாலி, அக்கா!"

"என் அதிர்ஷ்டத்தை நீதான் மெச்சிக் கொள்ள வேண்டும். அவன் கடலில் குதித்த செய்தி வந்ததிலிருந்து என் மனம் எப்படித் துடித்துக் கொண்டிருக்கிறது என்று உனக்குத் தெரியாது."

"அப்படியானால் அதுவும் ஒரு பயங்கர சொப்பனம் அல்லவா? அவர் கடலில் முழுகியது மட்டும் நிஜமான செய்திதானா!"

"அதுவும் ஒரு துர்ச் சொப்பன்மாயிருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பணிவு வேண்டும்



மௌரிய வம்சத்தின் தலைசிறந்த மன்னர் அசோகர். கலிங்கப்போரே இவர் செய்த கடைசி போர். அந்தப் போரில் வீரர்கள் பட்ட வேதனைகளை கண்டு மனம் மாறி, இனி தான் போரே செய்வதில்லை என்று முடிவெடுத்து நாட்டு நலப் பணிகளில் கவனம் செலுத்தி தலைசிறந்தவராக விளங்கினார்.

புத்த மதத்தை உலகமெங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டு அதில் தம் மகளையும் மகனையும் ஈடுபடச் செய்த பெருமைக்குரியவர் அவர்.

இத்தகைய பல பெருமைகளுக்கு சொந்தக்காரரான மாமன்னர் அசோகர். ஒருநாள் தனது ஆலோசகர்களுடன் சென்று கொண்டிருந்தார். அப்போது எதிரில் முனிவர் ஒருவர் வந்தார்.

மாமன்னர் அசோகர் அந்த முனிவரை பார்த்ததும் ஓடிப் போய் காலில் விழுந்து வணங்கினார். இச்செயல், அருகில் இருந்த அமைச்சருக்கு மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியது.

அமைச்சர் அசோகரை பார்த்து, "மாமன்னரே மிகப்பெரிய மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய உங்கள் தலையானது சாதாரண ஒரு முனிவரின் காலில் படுவதா?" என்று கேட்டார்.

அதற்கு பேரரசர் அசோகர் எந்த பதிலும் கூறாமல் லேசாக சிரித்தபடியே சென்று விட்டார்.

பிறகு ஒரு நாள் அமைச்சரை கூப்பிட்டு, "அமைச்சரே, எனக்கு ஒரு ஆட்டின் தலை, அடுத்ததாக ஒரு புலியின் தலை, மூன்றாவதாக ஒரு மனிதனின் தலை என மூன்று தலைகள் வேண்டும்" என்றார்.

அமைச்சர் மிகவும் சிரமப்பட்டு மூன்று தலைகளையும் எடுத்துக்கொண்டு அரசரின் முன் வந்தார்.

அவற்றை பார்த்த மாமன்னர் அசோகர், "மிகவும் நல்லது. இப்பொழுது இந்த மூன்று தலைகளையும் எடுத்துக் கொண்டு போய் சந்தையில் விற்றுவிட்டு வாருங்கள்" என்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விடயத்தை புரிய வைக்கிறது,
ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## துரோணரின் கேள்வியும் அருச்சுனனின் பதிலும்

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் வில்வித்தையைப் பயிற்றுவித்தவர் துரோணாச்சாரியார்.

ஒரு நாள் அவர் தனது மாணாக்கர்களின் வில்வித்தையின் ஆற்றலை மதிப்பீடு செய்ய எண்ணினார்.

அதற்காக ஒரு பெரிய மரத்தின் கிளை உச்சியில், கிளியின் உருவமொன்றை வைத்தார்.அம்பை எய்து கிளியை விழுத்த வேண்டும். இதுவே நிபந்தனை.

முதலில் துரியோதனன், துரோணர் வினாத் தொடுக்கிறார். துரியோதனா! உனக்கு மரம் தெரிகிறதா? இல்லை. கிளை? இல்லை. இலை? ஆம் சுவாமி. இப்போது நீ அம்பை எய்யலாம் என்கிறார் துரோணர்.

அவ்வளவுதான் துரியோதனனின் அம்பு பட்டு இலைக்கொப்பு கீழே விழுகிறது.

இனி கர்ணன். கர்ணா! உனக்கு மரம் தெரிகிறதா? இல்லை. கிளை? இல்லை. காய்? ஆம் சுவாமி.

இப்போது நீ அம்பை எய்யலாம். அவ்வளவுதான் கர்ணனின் அம்பு பட்டு மரத்திலிருந்த காய் கீழே விழுகிறது.

இனி அருச்சுனன் அம்பு எய்கின்ற நேரம். அருச்சுனா! உனக்கு மரம் தெரிகிறதா? இல்லை சுவாமி. கிளை? இல்லை. இலை? இல்லை. காய்? இல்லை. கிளி? இல்லை.

அருச்சுனா உனக்கு என்னதான் தெரிகிறது. துரோணர் உரத்துக் கேட்கிறார். சுவாமி! எனக்கு கிளியின் கழுத்து மட்டுமே தெரிகிறது.

சரி, இப்போது நீ அம்பை எய்யலாம். அவ்வளவுதான் அருச்சுனனின் அம்பு பட்டு கிளி கீழே விழுகிறது.

மகாபாரதம் குறித்து நம் மத்தியில் உரையாடப்படுகின்ற மேற்போந்த கதை இப்போது எதற்கு? என்று நீங்கள் கேட்கலாம்.

எல்லாவற்றுக்கும் காரணம் உண்டு.

ஆம், எது ஒருவரின் இலக்கோ அந்த இலக்கை நோக்கியே அவரின் பார்வையும் பயணமும் இருந்தாக வேண்டும்.

மரத்திலுள்ள கிளிதான் எங்களின் இலக்கு என்றால், மரம், கிளை, இலை, காய் என எதுவும் நமக்குத் தெரியலாகாது.

அப்படி கிளையும் இலையும் காயும் தெரியுமாக இருந்தால், எங்களின் குவிவு கிளி மீது இருக்க மாட்டாது என்பதைத்தான் மேற்போந்த கதை உணர்த்துகிறது.

ஆம், இப்போது நம் தமிழ் அரசியலில் தையிட்டி விகாரை பேசுபடுபொருளாகியுள்ளது.

தையிட்டி விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டதென்பது நிறுதிட்டமான உண்மை. அதேநேரம் விகாரை அமையப் பெற்ற காணி தனியாருக்குச் சொந்தமானதென்பதிலும் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டது என்பதால், அதனை உடைக்க வேண்டும் என்ற கருத்து சிலரால் முன்வைக்கப்படுகிறது.

ஆனால் விகாரையை உடைக்க வேண்டும் என்று நாம் முன்வைக்கின்ற கருத்து தென்பகுதி சிங்கள மக்களிடம் எவ்வாறான கருத்தியலை – தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.

எனவே தையிட்டி விகாரை தொடர்பில் சான்றாண்மைமிக்க நம்மவர்கள் கூடி ஆராய்ந்து, வன்மத்தை ஏற்படுத்தாத வகையில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் உடன்பாட்டுக்கு வந்தாக வேண்டும்.

ஏனெனில் எமது தமிழ் மக்களின் இலக்கு தையிட்டி விகாரை அன்று என்பது இங்கு புரிதற்குரியது.

# 43 எம்.பிக்கள் 122 கோடி ரூபாய் இழப்பீடு பெற்றுக் கொண்டமை தொடர்பில்

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு

(கொழும்பு)

2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட வன்முறையின் போது தமது வீடுகள் மற்றும் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவித்து 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் 122 கோடி ரூபாய் இழப்பீடு பெற்றுக்கொண்டமை தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் சக்தி அமைப்பின் தலைவர் ஜனாமுனி காமந்த துஷாரவினால் இந்த முறைப்பாடு நேற்று முன்தினம் சனிக்கிழமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டு பிரஜை ஒருவரின் சொத்து தீயிட்டு எரிக்கப்படுமாயின் அதனைச் செய்தவர்களைத் தேடிப் பார்த்து அதன் பின்னர் நீதி மன்றத்துக்குச் சென்றுதான் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அதேபோன்று அந்தச் சொத்துகளுக்குக் காப்புறுதி அளிக்கப்பட்டிருந்தால் அதன் மதிப்பு அளவீடு செய்ததன் பின்னரே காப்புறுதி நிறுவனம் அதனை வழங்கும். ஆனால் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு கிடைக்காத சலுகைகளைப் பயன்படுத்தி அவர்கள் நட்டஈட்டைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அறவழிப் போராட்டத்தின் போது அழிக்கப்பட்ட பொதுமக்களின் சொத்துக்கள், வீடுகள், பஸ்கள் எரிக்கப்பட்ட போது எந்தவித நட்டஈடும் வழங்கப்படவில்லை. எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து வீடுகள் தீக்கிரையாகின. அவர்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை. தாங்களே அமைச்சரவையில் இருந்து தங்களுக்கு இடையிலேயே அதனைப் பகிர்ந்துகொள்வது நியாயமான விடயமா? இயற்கை அனர்த்தங்களால் வீடுகள் அழிவடைந்தன. ஆனால் நட்டஈடு வழங்கப்படவில்லை.

எனவே இது தொடர்பில் நாம் குற்றப்புல னாய்வுத்திணைக்களத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளோம். மக்களின் பிரச்சினைகளை சமூகமயப்படுத்த வேண்டும் என இந்த அரசாங்கத்திடம் கூறிக் கொள்கிறோம். நாம் அது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்வோம். ஆனால் அதனை மேற்கொள்வதற்கான சட்டங்கள் நாட்டில் இல்லையென்றால் சட்டங்களை உருவாக்குங்கள்.நாம் 159 பேருடன் அதிகாரத்தை வழங்கியுள்ளோம். நாட்டு மக்களின் சொத்துக்களை கொள்ளையடித்தவர்களுக்கு எதிராக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். உண்மையில் இந்த வீடுகளுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் தீ வைக்கப்பட்டதா? அல்லது அவர்களே வேண்டும் என்று தீ வைத்துக் கொண்டார்களா? என்ற சந்தேகம் எமக்குள்ளது.

எனவே இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுங்கள் என்றார். (ம-7)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மோதல்

### இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப்பீட மாணவர்களிடையே நேற்று ஏற்பட்ட மோதலில் இரண்டு மாணவர்கள் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று புதுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. இதன்போது 3ஆம் மற்றும் 4ஆம் ஆண்டு மாணவர்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டு பின்னர் கைகலப்பு ஏற்பட்டது.

இதன்போது ஏற்பட்ட மோதலில் இரண்டு மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-7)

## சட்டவிரோத தங்க நகைகளுடன் இருவர் அதிரடிக் கைது

(கொழும்பு)

டுபாயிலிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட தங்க நகைகளுடன் இரு சந்தேகநபர்கள் கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலன்னாவ மற்றும் வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 34 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவரிடமிருந்து தங்கச் சங்கிலி, 05 தங்க வளையல்கள் மற்றும் 10 மோதிரங்களும் மற்றைய நபரிடமிருந்து தங்கச்சங்கிலி, தங்க வளையல்கள் மற்றும் 07 மோதிரங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளுடன் சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக இலங்கை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## மாவைக் கந்தனுக்கு தைப்பூச பால்குடப் பவனி

(யாழ்ப்பாணம்)

முருகப்பெருமானின் திருவடிகளைப் போற்றித் துதித்து உய்யத்தக்க நன்நாளான தைப்பூச நன்நாளில் சோழ இளவரசி மாருதப்புரவீர வல்லியால் ஸ்தாபிக்கப் பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரக் கந்த சுவாமி ஆதீனத்தில் தைப்பூசப்பால்குடப்பவனி சிறப்புற இடம்பெறவுள்ளது.

குறித்த பால்குடப் பவனியானது நாளை செவ்வாய்க்கிழமை மாலை 02.30 மணியளவில் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி வழியாக மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தைச் சென்றடையவுள்ளது.

தொடர்ந்து மாவைக் கந்தனுக்கு விஷேடபாலாபிஷேகமும் சிறப்புப் பூஜைகளும் இடம்பெறவுள்ளது. (ம-7)

## நாடு முழுவதும் மின் தடை

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிக்கை கோர நடவடிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடை தொடர்பில் அறிக்கை கோருவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த அறிக்கையின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, தேசிய மின்கட்டமைப்பு வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## கோண்டாவிலில் "யோகா" பயிற்சிநெறிகள் ஆரம்பம்

(கோண்டாவில்)

வேத பாராயண சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் சூரிய யோகாக் கல்லூரியால் நடாத்தப்படும் யோகாப் பயிற்சிகள் கோண்டாவில் உப்புமடப் பிள்ளையார் கோயில் அருகாமையில் அமைந்துள்ள வேதபாராயண சனசமூக நிலையத்தில் தைப்பூச நன்நாளான நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மாணவர்கள், அரச சேவையாளர்கள் நலன் கருதி பௌர்ணமி விடுமுறை தினமான மறுநாள் புதன் கிழமை காலை 8.00 மணிக்கும் அறிமுக வகுப்பு நடைபெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் பகுதி - II

**17**

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

எல்லாமாக நான்கு பெண் உறுப்பினர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் இருந்தனர்.

கரைச்சி பிரதேச சபையை பொறுத்தவரை பரந்தன் வட்டாரத்திலிருந்து கிருஷ்ணவேணிவிக்ரர் லோகநாதன், புன்னை நீராவி வட்டாரத்திலிருந்து கலைவாணி சவுந்தரராஜன் தெரிவு செய்யப்பட்டனர். பட்டியலிலிருந்து பிரபாமணி கணேசமூர்த்தி, பன்னீர்ச்செல்வம் சர்மிலா, செல்வராணி தர்மலிங்கம், சிவகுமார் மெரிஸ்டெலா றொமிதா, சிவராஜா சறோஜாதேவி மற்றும் செல்வராசா பத்மகலா என ஆறு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக எட்டு பெண் உறுப்பினர்கள் கரைச்சி பிரதேச சபையில் இருந்தனர்.

பூநகரி பிரதேச சபையை பொறுத்தவரை பொன்னாவெளி வட்டாரத்திலிருந்து ஜெயசித்திரா தயானந்தன் தெரிவு செய்யப்பட்டார். பட்டியலிலிருந்து உதயதர்சினி தனேந்திரன், மேரிடென்சியா யோன் பின்ரன், வட்சலாதேவி வசந்தகுமார் என மூன்று பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக நான்கு பெண் உறுப்பினர்கள்

| உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவுசெய்யப்பட்பெண் உறுபினர்கள் வீதம் கிளிநொச்சி மாவட்டம் | | | |
|---|---|---|---|
| உள்ளூராட்சி சபை | மொத்த உறுப்பினர்கள் | பெண் உறுப்பினர்கள் | பெண் % |
| பச்சிலைப்பள்ளி பிரதேச சபை | 13 | 4 | 30.8% |
| கரைச்சி பிரதேச சபை | 35 | 8 | 22.9% |
| பூநகரி பிரதேச சபை | 20 | 4 | 20.0% |
| மொத்தம் | 68 | 16 | 23.5% |

பூநகரி பிரதேச சபையில் இருந்தனர்.

## 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம்

மன்னார் நகர சபையை பொறுத்தவரை சவுத்பார வட்டாரத்திலிருந்து சிறிதரன் அந்தோனியம்மா தெரிவு செய்யப்பட்டார். பட்டியலிலிருந்து டிலானி குரூஸ் சதீஸ்குமார் மற்றும் நாகேஸ்வரா வடிவுக்கரசி என இரண்டு பெண்கள் தெரிவு செய்யப் பட்டனர். எல்லாமாக மூன்று பெண் உறுப்பினர்கள் மன்னார் நகர சபையில் இருந்தனர்.

மன்னார் பிரதேச சபையை பொறுத்தவரை பேசாலை வட்டாரத்திலிருந்து திரேஸ் சின்னராணி கிறிஸ்ரின் குரூஸ் தெரிவு செய்யப்பட்டார். பட்டியலிலிருந்து அன்ரன் சுனில் தனபாலன் புனிதவதி, றோமன் டிப்னா குரூஸ் மற்றும் அப்துல் ஜப்பார் மஹீசா என மூன்று பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக நான்கு பெண் உறுப்பினர்கள் மன்னார் பிரதேச சபையில் இருந்தனர்.

நானாட்டான் பிரதேச சபையை பொறுத்தவரை இரட்டை அங்கத்தவர் வட்டாரமான இலஹடிப்பிட்டியிலிருந்து வோல்ஸ்ரன் சுஜிதா என்ற பெண் தெரிவுசெய்யப்பட்டார். பட்டியலிலிருந்து செபமாலை கிறிஸ் தம்மா, அந்தோனிக்கம்மா ஞானக் கோன், கிறிஸ்ரி சந்திரிகா சோசை என மூன்று பெண்கள் தெரிவு செய்யப் பட்டனர். எல்லாமாக நான்கு பெண் உறுப்பினர்கள் நானாட்டான் பிரதேச சபையில் இருந்தனர்.

முசலி பிரதேச சபைக்குபட்டியலிலிருந்து கலீலுல்லா தஸ்னீமா, அப்துல் றகீம் ஹறாஜிதா, ராஜேஸ்வரி செல்வராஜ் என மூன்று பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

மாந்தை மேற்கு பிரதேச சபையை பொறுத்தவரை வெள்ளாங்குளம் வட்டாரத்திலிருந்து ஜேசுதாசன் புனித பிரிசித்த தெரிவு செய்யப்பட்டார். பட்டியலிலிருந்து மல்லிகா அமிர்தநாதன், பத்திநாதன் சார்மலா, சந்திரமதி வினோத், தவமலர் நெசுவுநாதன் மற்றும் நசூர்தீன் றம்சியா என ஐந்து பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர். எல்லாமாக ஆறு பெண் உறுப் பினர்கள் மாந்தை மேற்கு பிரதேச சபையில் இருந்தனர்.

## 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம்

வவுனியா நகர சபையை பொறுத்தவரை இரட்டை அங்கத்தவர் வட்டா

| உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவுசெய்யப்பட்பெண் உறுபினர்கள் வீதம் மன்னார் மாவட்டம் | | | |
|---|---|---|---|
| உள்ளூராட்சி சபை | மொத்த உறுப்பினர்கள் | பெண் உறுப்பினர்கள் | பெண் % |
| மன்னார் நகர சபை | 16 | 3 | 18.8% |
| மன்னார் பிரதேச சபை | 21 | 4 | 19.0% |
| நானாட்டான் பிரதேச சபை | 16 | 4 | 25.0% |
| முசலி பிரதேச சபை | 16 | 3 | 18.8% |
| மாந்தை மேற்கு பிரதேச சபை | 25 | 6 | 24.0% |
| மொத்தம் | 94 | 20 | 21.3% |

ரமான மூன்று முறிப்பிலிருந்து மஞ்சுலா தர்மலிங்கம் என்ற பெண் தெரிவு செய்யப்பட்டார். பட்டியலிலிருந்து லக்ஸ்சனா நாகராஜன், பொடி சிஞ்ஞொகே தர்மதாச புஞ்சி குமாரி,சமந்தா செபநேசராணி மற்றும் பாஸ்கரன் ஜெயவதனி என நான்கு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக ஐந்து பெண் உறுப்பினர்கள் வவுனியா நகர சபையில் இருந்தனர். வவுனியா நகர சபை தற்போது மாநகர சபையாகும்.

வவுனியா வடக்கு பிரதேச சபையை பொறுத்தவரை கல்யாணபுரம் கிராமம் வட்டாரத்திலிருந்து ரத் நாயக்க முதியன் சேலாகே காந்திலதா தெரிவுசெய்யப்பட்டார். பட்டியலிலிருந்து பரணிதரன் ஜமுனா, வீரசிங்க ஆரச்சிலாகே நிசாந்தி பிரதீபிகா குமாரி, சிவரஞ்ஜினி ரகுநேசன், ராஜசிலோசனா சசீந்திரன் என நான்கு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக ஐந்து பெண் உறுப்பினர்கள் வவுனியா வடக்கு பிரதேச சபையில் இருந்தனர்.

வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபைக்கு பட்டியலிலிருந்து சாந்தகுமாரி மகேந்திரலிங்கம், நவரத்தினம் நவதீஸ்வரி, நவரட்ணம் சிவாஜினி, அஜந்தன் தயாழினி என நான்கு பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையை பொறுத்தவரை மருதமடு வட்டாரத்திலிருந்து அஞ்சலா கோகிலகுமார தெரிவு செய்யப்பட்டார். பட்டியலிலிருந்து கேதீஸ்வரன் ஞானமலர், திரவியவதனி ஜெயப்பிரதாப், சுப்பிரமணியம் ஞபாலா, ரிச்சட் அன்றொனி அமிலியா, சுதர்ஜினி யோகநாதன்,

| உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவுசெய்யப்பட்பெண் உறுபினர்கள் வீதம் வவுனியா மாவட்டம் | | | |
|---|---|---|---|
| உள்ளூராட்சி சபை | மொத்த உறுப்பினர்கள் | பெண் உறுப்பினர்கள் | பெண் % |
| வவுனியா நகர சபை | 21 | 5 | 23.8% |
| வவுனியா வடக்கு பிரதேச சபை | 26 | 5 | 19.2% |
| வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபை | 19 | 4 | 21.1% |
| வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை | 30 | 7 | 23.3% |
| வவுனியா தெற்கு (சிங்கள) பிரதேச சபை | 18 | 5 | 27.8% |
| மொத்தம் | 114 | 26 | 22.8% |

அமரசேகர லியனாரச்சிகே துஷாரி முத்துமாலி என ஆறு பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர். எல்லாமாக ஏழு பெண் உறுப்பினர்கள் வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையில் இருந்தனர்.

வவுனியா தெற்கு (சிங்கள) பிரதேச சபையை பொறுத்தவரை அலகல்ல வட்டாரத்திலிருந்து ரணாகே ரூபா தெரிவுசெய்யப்பட்டார். பட்டியலிலிருந்து ஹேரத் முதியன்சேலாகே சிராணி மல்லிகா, சங்கீதா சமன்குமாரி ஜயவர்தன, தசநாயக்கே சித்திரா சமன் குமாரி, சமாகா பிரசன்ன லிமல சேணா என நான்கு பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர். எல்லாமாக ஐந்து பெண் உறுப்பினர்கள் வவுனியா தெற்கு (சிங்கள) பிரதேச சபையில் இருந்தனர்.

## 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம்

மாந்தை கிழக்கு பிரதேச சபையை பொறுத்தவரை கரும்புள்ளியான் வட்டாரத்திலிருந்து வாகீஸ்வரன் நிருஜா தெரிவுசெய்யப்பட்டார். பட்டியலிலிருந்து சரஸ்வதி தெய்வேந்திரம், இராஜேஸ்வரி சிறிதரன் என இரு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக மூன்று பெண் உறுப்பினர்கள் மாந்தை கிழக்கு பிரதேச சபையில் இருந்தனர்.

துணுக்காய் பிரதேச சபையை பொறுத்தவரை அனிச்சியன்குளம் வட்டாரத்திலிருந்து புவனேஸ்வரி முத்துத்தம்பி தெரிவுசெய்யப்பட்டார். பட்டியலிலிருந்து கந்தசாமி சகுந்தலாதேவி, புவனேஸ்வரி பாலசுப்பிரமணியம் சிறிதரன் என இரு பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர். எல்லாமாக மூன்று பெண் உறுப்பினர்கள் துணுக்காய் பிரதேசசபையில் இருந்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையை பொறுத்தவரை விசுவமடு வட்டாரத்திலிருந்து தம்பிஜயா கேதினியும் பாரதிபுரம் வட்டாரத்திலிருந்து ஜீவரத்தினம் கிருபாயினியும் தெரிவு செய்யப்பட்டனர்.

பட்டியலிலிருந்து ஸ்ரீகுமார் நிஷாந்தி, அன்ரன் ரெட்ணராஜா லாவண்யா, சுவந்தினி சிவஞானராஜ், நாகமணி வன்னியசிங்கம் என நான்கு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். எல்லாமாக ஐந்து பெண் உறுப்பினர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் இருந்தனர்.

கரைத்துறைபற்று பிரதேச சபைக்கு பட்டியலிலிருந்து உதயகுமார் றணிஸ்லா, செல்வராஜா றஜிதா, ஹேவா கோமானகே எரந்தனி, இமக்கு லேற்றா புஸ்பானந்தன், பகீரதி ஜெகதீஸ்வன் என ஐந்து பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

| உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவுசெய்யப்பட்பெண் உறுபினர்கள் வீதம் முல்லைத்தீவு மாவட்டம் | | | |
|---|---|---|---|
| உள்ளூராட்சி சபை | மொத்த உறுப்பினர்கள் | பெண் உறுப்பினர்கள் | பெண் % |
| மாந்தை கிழக்கு பிரதேச சபை | 13 | 3 | 23.1% |
| துணுக்காய் பிரதேச சபை | 13 | 3 | 23.1% |
| புதுக்குடியிருப்பு பிரதேச சபை | 22 | 5 | 22.7% |
| கரைத்துறைபற்று பிரதேச சபை | 24 | 5 | 20.8% |
| மொத்தம் | 72 | 16 | 22.2% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

பதி அநுர குமார திஸாநாயக்க இன்று திங்கட்கிழமை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் செல்கிறார்.

இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி உட்பட அதிகாரிகள் பலர் பங்கேற்கவுள்ளனர்.

வியாழக்கிழமை வரை அங்கு தங்கியிருக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர், குறைந்த விலையில் எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதி உள்ளிட்ட இருதரப்புப் பொருளாதார ஒத்துழைப்புக்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.

மேலும், டுபாயில் இடம்பெறுகின்ற உலக அரசுகளுக்கான உச்சி மாநாட்டிலும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பங்கேற்று சிறப்புரை ஆற்றவுள்ளார். அத்துடன் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் ஏனைய நாடுகளின் தலைவர்களுடனும் இருதரப்பு சந்திப்புகளில் கலந்து கொள்வார். தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, எரிசக்தி மற்றும் சுற்றுலா உள்ளிட்ட முக்கிய துறைகளுடனான ஒத்துழைப்புக்கள் தொடர்பில் இந்த விஜயத்தின்போது கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. (ம-7)

## 20 போதை...

மாத்திரைகள் விற்பனையில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் ஒருவரே 20 போதை மாத்திரைகளுடன் நேற்று ஞாயிற்றுக் கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## 14 இந்திய மீன...

பேச்சாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,316)

## யாழில்...

ரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வெளிநாடு செல்வதற்காக ஆசைப்பட்ட இளைஞரொருவரிடம் 80 இலட்சம் ரூபாய் வரையான பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு வங்கி அறிக்கையை நேரடியாக வந்து தமக்குக் காட்டுமாறு வெளிநாட்டு முகவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனை நம்பி சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதிக்குச் சென்ற இளைஞனை காரில் கடத்திச் சென்ற குறித்த குழு, இளைஞரின் வங்கிக் கணக்கில் இருந்த 80 இலட்சம் ரூபாய் வரையான பணத்தை மற்றுமொருவரின் வங்கிக் கணக்கிற்கு மாற்றிவிட்டு இளைஞரைக் கோப்பாய்ப் பகுதியில் இறக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் பணம் மாற்றப்பட்ட வங்கிக் கணக்கிற்கு உரித்தான பெண்ணொருவரைக் கைது செய்ததுடன் கடத்தலில் ஈடுபட்ட மேலும் மூவரைக் கைது செய்தனர்.

இந்நிலையில் குறித்த பெண்ணின் வங்கிக் கணக்கில் இருந்து பணம் வேறொரு வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் பணத்தை மீட்பது தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைதான நான்கு சந்தேக நபர்களையும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## பேரவை உறுப்...

உறுப்பினர்கள் தமது பதவியை இராஜினாமாச் செய்வர் எனத் தெரியவருகிறது.

இதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அண்மையில் யாழ்.பல்கலைக்கழகப் பேரவையின் வெளிவாரி உறுப்பினர்கள் பதவி விலக வேண்டுமெனக் கோரி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தமை தெரிந்ததே. (ம-7)

## அரசே நாட்டில்...

அவிசாவளையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்க முடியாத அரசாங்கம் எவ்வாறு மக்களை வாழ வைக்கப் போகிறது என்ற விடயத்தில் பிரச்சினை காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கட்சியிலிருந்தபோது நெல்லுக்கு 150 ரூபாய் உத்தரவாத விலையைத் தருவதாகக் கூறினார்கள்.

இவ்வாறான பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றும் செயல்களில் ஈடுபட்டு, ஆட்சிக்கு வந்த பின்னர் விவசாயிகளைக் கைவிட்டுள்ளனர்.

இன்று அரச உத்தியோகத்தர்கள் விருப்பத்தின் பேரில் இடமாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கு ஆதரவானவர்கள் மாத்திரம் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

பெரும்பான்மையான மக்கள் இன்று கடன் சுமைக்கு ஆளாகியுள்ளனர்.

அண்மையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்ற போதும் அவர்களுக்கு உரிய தீர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## கெஹ...

துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் நிறைகுறைகளைப் பார்வையிட்டுக் கலந்துரையாடினார்.

கிளீன் ஸ்ரீ லங்காத் திட்டத்தை முன்னெடுக்கும் வகையில் குறித்த புகையிரத நிலையத்தைப் பார்வையிட்ட அமைச்சர், பயணிகளுடனும் கலந்துரையாடினார். இதன்போது ஊடகங்களுக்கு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல கோடிகளை கெஹலிய பெற்றார். ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 லட்சம், 7 லட்சம், இறுதியாக 10 லட்சம் என மட்டுமே வழங்கப்பட்டது. அவருக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டினை மாவட்டத்துக்கே வழங்கியிருக்கலாம் என அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் நாடு முழுவதும் காணப்படுகிறது. அதுபோல கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊதியம் போதாது. அவர்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட வேண்டும். அந்தப் பிரச்சினைக்கு மக்களுடனும் கலந்துரையாடித் தீர்வு எட்டப்பட வேண்டும். அதனை விரைவில் செய்வோம்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் மின்பிறப்பாக்கி இயங்காத விடயம்தொடர்பில் எமது மாவட்ட அமைப்பாளர் பார்வையிட்டு, சுகாதார அமைச்சுக்கு தகவல் வழங்கி விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 5742
N 1 9 7 9 2 3
அத சம்பத N 7 9 2 3
சீட்டிழுப்பு இலக்கம் 317
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1772
V 08 16 32 66 V
04646

மெகா பவர்
திகதி 09/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2090
R 25 03 62 64 69

ஜய ஜய
திகதி 2025.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 010
U 0 3 3 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3984
சீட்டிழுப்பு திகதி | 09.02.2025
F 08 22 29 75
F

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.09
சீட்டிழுப்பு இலக்கம் 1051
கடகம் 01 31 45 61 கடகம்
47537 42

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.02.2025 வெற்றி வாரம் 450
K 1 2 1 6 6 5
60831
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,795,229.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2716
சீட்டிழுப்பு திகதி 2025.02.09 தினம் ஞாயிற்றுக்கிழமை
03 09 35 59 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,140,460.80

சனிதா
09.02.2025 வெற்றி வாரம் 4877
17 25 63 67 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,819,904.80
74952

சசிரி
619
09.02.2025 ஞாயிற்றுக்கிழமை
25 38 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4428
சீட்டிழுப்பு திகதி 09.02.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
31 39 42 60 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.10,500,164.00
103866

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 31 05 33 36 67
1892
09.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.564,740,254.40

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2542
சீட்டிழுப்பு திகதி : 2025.02.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,124,548.00
03 43 48 51 M
231904


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திடீர் மின்வெட்டால்...

இந்தச் சம்பவத்தால் நாடு முழுவதும் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டது.

நாடு முழுவதும் ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக, ரயில்வே கடவைகளில் சமிக்ஞை அமைப்புகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

இதன் காரணமாக, ரயில் போக்குவரத்தில் சிறு இடையூறுகள் ஏற்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், ரயில் குறுக்கு வீதிகளின் பாதுகாப்புக் கடவைகளை செயற்படுத்துவதிலும் பாதிப்புகள் ஏற்பட்டன.

மேலும், மின் தடை காரணமாக ரயில் நிலையங்களில் அறிவிப்புகள் வெளியிடுவதிலும் சிக்கல் ஏற்பட்டது.

மேலும் நாடு முழுவதும் ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக நீர் விநியோக நடவடிக்கையும் பாதிக்கப்பட்டது.

நிலைமையை கருத்திற்கொண்டு, நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பொது மக்களைக் கேட்டுக் கொண்டது.

மின்தடையால் கிளிநொச்சி வைத்தியசாலைச் சேவைகள் பாதிக்கப்பட்டதுடன், நோயாளர்கள் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மின் தடை காரணமாக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் மின் தடை ஏற்பட்டிருந்தது.

மின்பிறப்பாக்கியும் இயங்காத நிலையில் பலவேறு சிகிச்சைப் பிரிவுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

புதிதாகக் கொண்டு வரப்பட்ட மின்பிறப்பாக்கியும் பொருத்தப்படாத நிலையில் வைத்தியசாலையின் பல வேறு சேவைகள் தடைப்பட்டிருந்தன. (ம-7)

## அரசு மீது...

கத்தின் மீது விரக்தியடைந்துள்ளதாக சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர,

"தற்போதைய அரசாங்கம் எப்போதும் வெற்றி பெறும் என்று ஒரு கணம் கூட நினைக்காதீர்கள், அது தான் போக்கு, அதுதான் நடந்துள்ளது, திசைகாட்டிக்கு வாக்களித்தவர்கள், அதுதான் சவால்."

அந்த சவாலை சமாளிக்க திசைக் காட்டிக்கு வாக்களித்தவர்களுக்கு சரியான விடயங்களை விளக்கினால், அவர்கள் எங்களுடன் நிற்பார்கள்.

ஏன் என்றால் எங்களுடன் இருந்தவர்கள் தான் அவர்கள் அனைவரும்.

இதை நான் மிகவும் பொறுப்புடன் கூறுகிறேன். இந்த முறை திசை காட்டிக்கு உதவிய எனது நண்பர்கள் பலர் இன்று திசைகாட்டியில் இல்லை.

எனவே நமது அதிகபட்ச ஆற்றலுடன் இதை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியும் என்றார். (ம-7)

# இந்திய மீனவர்களது உடைமைகள் ஏலத்தில்

## விற்றது பருத்தித்துறை நீதிமன்றம்

(பருத்தித்துறை)

இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடிப் படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பகிரங்க ஏலம் மூலம் 5 இலட்சத்து 60ஆயிரத்து 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் வைத்து, கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதி நான்கு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, மீன்பிடி படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அரசுடமையாக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அரசுடமையாக்கப்பட்ட மீன்பிடிப் படகு, 2 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாவிற்கும், மீன்பிடி வலைகள் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவிற்கும், இரண்டு வெளியிணைப்பு இயந்திரங்கள் 64 ஆயிரம் ரூபாவிற்கும், குளிரூட்டல் பெட்டி 50 ஆயிரம் ரூபாவிற்கும், இரண்டு ஜிபிஎஸ் கருவிகள் 40 ஆயிரத்து 100 ரூபாவிற்கும், நங்கூரம் 8 ஆயிரம் ரூபாவிற்குமாக அனைத்துப் பொருட்களும் 5 இலட்சத்து 60 ஆயிரத்து 100 ரூபாவிற்கு ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## மின் பிறப்பாக்கியிலிருந்து

# வெளியான புகையைச் சுவாசித்த நால்வர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

மின் பிறப்பாக்கியில் இருந்து வெளியான புகையினால் பாதிப்புக்குள்ளான நால்வர் பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி ஏ.எஸ்.கே. ஜெயசூர்யா தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் நேற்று ஏற்பட்ட மின்சார விநியோகத்தடையை அடுத்து, பொகவந்தலாவை நகரில் உள்ள விற்பனை நிலையமொன்றில் மின் சாரத்தைப் பெறுவதற்காக மின் பிறப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த மின் பிறப்பாக்கியில் இருந்து வெளியான புகையினை சுவாசித்ததன் காரணமாக அந்த விற்பனை நிலையத்தின் ஊழியர்கள் நால்வர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

# கடந்த அரசின் கவனக் குறைவான திட்டமே மின் வெட்டுக்குக் காரணம்

## வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி

(கொழும்பு)

தேசிய மின்சார அமைப்பின் சமநிலையைப் பேணுவதற்கு கடந்த காலங்களில் எந்தத் திட்டமும் செயற்படுத்தப்படவில்லை என வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கங்களின் திட்டமிடல் இல்லாமையும் தொலைநோக்குப் பார்வையற்ற வேலைத் திட்டமும் மின்வெட்டுக்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மின்சார அமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதில் கடந்த கால அரசாங்கங்கள் உரிய கவனம் செலுத்தவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழில்நுட்பத்தைப் பற்றிய புரிதல் இல்லாத தவறான வழிகாட்டுதலும் இந்த நிலைமைக்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

இந்த நிலைமைக்கான காரணங்கள் முழுமையாக ஆராயப்பட்டு, இது போன்ற நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயக் கொடி கூறினார். (ம-7)


விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
(829)
திருமுருகன் கொம்நெற்
பணியாளர் தேவை
321, K.K.S Road, Jaffna.
077 755 4528



உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2234)

கிழவன்காடு கலாமன்றம் (யாழ் கிளை)
தைப்பூச நாள் வகுப்புக்களும் அனுமதியும்
11.02.2025 செவ்வாய்க்கிழமை தைப்பூச தினத்தன்று பி.ப 4.30 மணியளவில் சங்கீதம், பண்ணிசை, பரதநாட்டியம், மிருதங்கம், வயலின், வீணை, சித்திரம் போன்ற கலைப் பாடங்களுக்கான நாள் வகுப்புக்கள் நடைபெறும்.
புதிய மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்படுவர்.





இல.428, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
பதிவாளர் : 077 578 6638
(C-2236)

காணி விற்பனைக்கு
யாழ். புன்னாலைக்கட்டுவன் செல்லும் பிரதான வீதியில் 100m தூரத்தில் 20 பரப்புக் காணி 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் காணி விற்பனைக்கு உண்டு.
♦ குடியிருப்பு சூழல், நல்ல நன்னீர் ஊற்று
♦ பார்வையிடும் நேரம் : காலை 8.00 தொடக்கம் மாலை 6.00 வரை
076 755 8606,
077 623 4204(whatsApp)
(3381)

யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்
யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
(828)
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (3380)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org